Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-25 08-06-2005 புதன்கிழமை ஓசை 110



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12122) விநாயகர் வீதி, மயிலிட்டி.

### போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து, நடமாட்டம்

# அரசாங்கம் உறுதி செய்யத்தவறின் யுத்தநிறுத்தம் கேள்விக்குறியாகிவிடும்!

## நோர்வேத் தூதுவர், கண்காணிப்புக் குழுவினரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துப் பாதுகாப்பான நடமாட்டம் என்பன சரியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது நெருக்கடிக்குள்ளாக்கப்படுமாக இருந்தால் யுத்தநிறுத்தச் சூழல் முழு அளவில் கேள்விக்குறியாக மாறிவிடுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேத் தூதுவர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதித் தலைவர் ஆகியோருடனான சந்திப்பின் போது நேற்று வலியுறுத்தியுள்ளார்.**

இச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்றைய சந்திப்பில் முக்கியமாக யுத்தநிறுத்த உடன் படிக்கை சம்பந்தமாகவும் பொதுக்கட்டமைப்பு இழுத்தடிப்புச் சம்பந்தமாகவும், தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற புத்தர்சிலை விவகாரமும் அதனால் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமைகள், அண்மைக்கால கொலைகள் பற்றியும் அதன் பாரதூரத் தன்மைகள் பற்றியும் அனுசரணையா

(02 ஆம் பக்கம் பார்க்க)



## ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இராஜினாமா!



(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சுப் பதவியில் இருந்து அமைச்சர் மங்கள சமரவீர இராஜினாமாச் செய்துள்ளார். இதுதொடர்பாக அவர் சனாதிபதியிடம் பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாகவும் அதனை சனாதிபதி ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது.குறித்த அமைச்சுப்பொறுப்பை பிரதியமைச்சர் திலான் பெரேராவுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைச் சம்பவங்களுக்கு அரசாங்கமே பதில் கூற வேண்டும்!

### -போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதித்தலைவர்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கையில் தற்பொழுது இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களுக்கு அரசாங்கமே பதில் சொல்ல வேண்டுமென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுபிரதித்தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்ளுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தளபதிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குச்செல்வதற்குரிய பாதுகாப்புத் தொடர்பாக கலந்துரையாடினோம்.

விடுதலைப்புலிகளின் செய்தியை மிகக்கவனத்திலெடுத்து முன்னெடுத்துச் சென்று பேச்சுக்கள் நடத்தவுள்ளேன்.விடுதலைப்புலிகளின் செய்தியை அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கவுள்ளேன்.இது விரைவாக நடைபெறும். இதன்பின் அரசாங்கம் விடுதலைப்புலிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### -திருகோணமலை புத்தர்சிலை விவகாரம்-

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.இதன் காரணமாக சபை அமர்வுகள் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில் பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானதும் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தாம் சமர்ப்பித்த நீதிபதிகளின் வேதனங்களை உயர்த்துவது தொடர்பான பிரேரணை தொடர்பில் தமது உரையை ஆரம்பித்தார். இதன்போது குறுக்கிட்ட தமிழ்த்தேசிய பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருஜெயசூரியவை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் படுகொலைக்கு எதிர்ப்பு; குருநகரில் துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச சம்பவத்தில் உயிரிழந்த இளைஞ்கள் இருவருக்கும் அஞ்சலி செலுத்தும் வகையிலும், இப்படுகொலைகளுக்கான தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையிலும் முழு அளவில் குருநகர் பகுதியில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பிரதான வீதிகளுக்கு குறுக்காகக் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன் வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் மீனவ சங்கங்களென அனைத்து இடங்களிலும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளன.அத்துடன் குருநகர் பகுதியெங்கும் ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டு சோககீதம் இசைக்க விடப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் சதிமுறியடிப்புச் சமரில் ஆறு போராளிகள் வீரச்சாவு

11-04-2004 அன்று தேசத்துரோகி கருணாவின் சதிமுறியடிப்பு சமரில் ஆறு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

- **வீரவேங்கை - வான்முகிலன்** (கேதாரம் - சிவகுமார் துரத்திய மேடு துறைநீலாவணை மட்டக்களப்பு)
- **வீரவேங்கை - நேசன்** (கூவால பிள்ளை -அஜந்தன் கொற்றியாகுலை கண்ணன் குடா)
- **வீரவேங்கை - இளையராஜ்** (செல்லத்தம்பி- ராமேஸ்வரன் கரடியனாறு கொல்னி, மட்டக்களப்பு)

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவினால் இம்மாத இறுதிக்குள் பாராளுமன்றம் கலைக்கப்படலாம்

(கொழும்பு)

சனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி இந்த மாத இறுதிக்குள் தமது பங்காளிக்கட்சிகளுடன் முக்கிய கூட்டம் ஒன்றை நடத்திய பின்னர் பாராளுமன்றத்தை அவர் கலைப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக ஊடக இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டமானது எதிர்வரும் 22 ஆம் திகதியளவில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பாராளுமன்ற செயலர் பிரியானி விஜயசேகரவின் தகவலின்படி எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகின்ற போது அதில் காலை அமர்வு மாத்திரமே இடம்பெற அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம்....

ளர்கள் என்றவகையில் நோர்வேத் தரப்பினருக்கும் கண்காணிப்பாளர்கள் என்ற வகையில் கண்காணிப்புக்குழு பிரதித்தலைவரையும் அவரது குழுவினரையும் சந்தித்து எங்களது கரிசனையையும் ஆதங்கத்தையும் தெளிவு படுத்தியிருக்கிறோம்.

**யுத்தநிறுத்தம் நெருக்கடி நிலையை அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறதே?**

யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பொறுத்தவரை கடந்த மூன்று வருடங்களாக அது பேணப்பட்டு வந்திருக்கிறது. அதில் முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டதா? என்பது கேள்விக்குறியான விடயமாக இருந்தாலும் அது மூன்று வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அண்மைக்காலத்தில் இந்த உடன்படிக்கையில் முக்கியமாக எங்களது போராளிகளின் நடமாட்டம், போக்குவரத்து, தளபதிகள், பொறுப்பாளர்களின் பயண ஏற்பாடுகளில் ஏற்படுத்தப்படும் தாமதங்கள், தடைகள் பற்றி நாங்கள் எடுத்து விளக்கியிருக்கிறோம். ஆகவே இவை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கையாக உள்ளது. இதனை இன்று நாமும் எடுத்து விளக்கியிருக்கிறோம்.

எங்களது திருமலை, மட்டு, அம்பாறை மாவட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். இவர்கள் மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டியவர்கள். எங்கள் தலைவரின் ஆலோசனைகளை பெறுவதற்காக அவர்கள் வந்து செல்வது வழமை. இதற்கான போக்குவரத்தை நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரின் ஏற்பாட்டோடு இந்தப் போக்குவரத்துக்கள் சீராக மேற்கொள்ளப்பட்டு வந்தது. அனைத்து விடயங்களையும் நெருக்கடிக்குள்ளாக்கி இப்போது இந்த விடயத்தையும் நெருக்கடிக் குள்ளாக்கியிருக்கிறார்கள். இது உடனடியாகச் சீர்செய்யப்பட வேண்டும். போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்து-பாதுகாப்பான நடமாட்டம் என்பன சரியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது நெருக்கடி நிலைக்குள்ளாக்கப்படுமாக இருந்தால் யுத்தநிறுத்த சூழல் முழு அளவில் கேள்விக்குறியாக மாறிவிடும் என்கின்ற அபாய நிலையை அவர்களுக்கு எடுத்து விளக்கியிருக்கின்றோம். இதற்கான தீர்க்கமான பதிலை விரைவாகத்தரும் படியும் கண்காணிப்புக்குழுத் தலைமையிடம் கேட்டிருக்கின்றோம்.

அல்லாது விடில் கடந்தகாலம் போல கடற்படை, விமானப்படை,தரைப்படை ஆகியவற்றின் பாதுகாப்புடன் பயணிக்க வேண்டிய தேவை உருவாகும். இது தவிர்க்க முடியாததாக இருக்கும். இப்படியான நிலை உருவாகும் போது யுத்தநிறுத்த சூழலைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கு சாதகமான சூழலைத் தொடர்ந்தும் பேணக்கூடியதாக இருக்குமா? என்கின்ற கேள்வியும் உருவாகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு இதற்கான சரியான முடிவை தருமாறு நோர்வே தரப்பிடமும் கண்காணிப்புக் குழுவினிடமும் கேட்டிருக்கிறோம்.

**போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டு மூன்று வருடங்களாக விடுதலைப் புலிகளின் மூத்தஉறுப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்கியிருந்தது. இப்போது அரச தரப்பிலிருந்து ஏன் மாற்றமான போக்கு ஏற்பட்டுள்ளது?**

நான் நினைக்கிறேன் அரசாங்கத்தின் மீதான நிலைப்பாட்டின் உச்சக்கட்டத்தின் வெளிப்பாடுதான் இது.ஏனென்றால் புதிய அரசாங்கம் பதவி ஏற்றதன் பின்னர் ஆயுதக் குழுக்களை வைத்துக்கொண்டு படைத்தரப்பும் பரந்தளவில் கொலைகளையும் அச்சுறுத்தல்களையும் தீவிரப்படுத்தியிருக்கிறது. இத்தகைய போக்கின் விளைவுதான் எங்களது தளபதிகள், போராளிகளின் போக்குவரத்து மீது நெருக்கடியை ஏற்படுத்தி புலிகளைச் சீண்டி ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி புலிகள்மீதான வெறுப்பைக் காட்டுகின்ற நோக்கோடுதான் இதனைச் செய்து வருகிறார்கள்.

அண்மைய நாட்களாகத் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நெருக்கடி நிலைமைகள் தோன்றியுள்ளது. அதன் உச்சக்கட்டமாகவே தளபதிகள் போராளிகளின் போக்குவரத்தைத் தடைசெய்து ஒரு பாரிய நெருக்கடியை ஏற்படுத்த அரச படைகள் முனைவது போல தெரிகிறது. இதன் பாரதூரத்தன்மையை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறோம். இது உடனடியாகச் சீர் செய்யப்பட வேண்டும்.

**கிழக்கில் வன்முறைகள் தொடர்கிறது. அதுபோல யாழ்ப்பாணத்திலும் வன்முறைகள் ஆரம்பமாகியிருக்கின்றன. கொழும்பிலும் நிலைமைகள் மோசமாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றைச் சீர் செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கின்றீர்களா?**

இவற்றைப் பற்றி இன்று சுட்டிக் காட்டியிருக்கிறோம். எங்களது ஊடகவியலாளர் சிவராம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் எங்களது தமிழீழ மாவட்டங்களில் ஆதரவாளர்கள், பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகின்ற ஒரு நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இப்பொழுது அவர்கள் கிழக்கில் ஏற்படுத்திய ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளை முழுத்தீவுக்கும் பரவலாக்கியிருக்கிறார்கள். ஆகவே இராணுவப் புலனாய்வு அமைப்பு, படைத்தரப்பின் இந்தகைய செயற்பாடுகள் உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இந்த ஆயுதக் குழுக்கள் உடனடியாகக்கைது செய்யப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இதனால்தான் கொலைகளைக் கட்டுப்படுத்தலாம். அதை நாங்கள் இன்று தெளிவான பல ஆதார பூர்வமான தகவல்களுடன் சுட்டிக் காட்டி உண்மைத்தன்மையை வெளிப்படுத்தியிருக்கிறோம்

எங்களது ஆதரவாளர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு விடுதலைப் புலிகளே இதைச் செய்தார்கள் என்று பிரச்சாரப்படுத்தி உலக அளவில் விடுதலைப் புலிகள் மீது இந்தப் பழியை சுமத்த சிறிலங்காப் படையும் அரசும் முனைந்து கொண்டிருக்கின்றது.இதில் எந்த உண்மைத்தன்மையும் இல்லை. இவற்றின் பின்னால் உள்ள மர்மங்கள் இதன் பின்னுள்ள சக்திகள் என்பவற்றை எல்லாம் இலங்கை அரசுதான் கண்டுபிடிக்க வேண்டும். இத்தகைய கொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் ஆயுதக் குழுக் களைக்கட்டுப்படுத்து வதன் ஊடாகத்தான் இவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்கின்ற எங்கள் ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறோம்.

**இதுவிடயத்தில் கண்காணிப்புக் குழுவினரும் அனுசரணையாளர்களும் தமது கடமைகளைச் சரியான முறையில் செய்யவில்லை என்ற உணர்வு உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றதா?**

கண்காணிப்பாளர்களோ அல்லது அனுசரணையாளர்களோ தமது கடமைகளைச் செய்வதானால் இரண்டு தரப்பினதும் ஒத்துழைப்பும் தேவை. இந்த சமாதான முயற்சியில் இரு சமபல சக்திகள் பங்கு கொண்டிருக்கின்றன.

ஆகவே அவர்கள் பேசிய விதத்தில் அரச தரப்பிடம் இருந்து அவர்களுக்கு பூரண ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை போலத்தான் எங்களால் உணரமுடிகிறது. ஆகவே அவர்களிடம் நாம் ஆணித்தரமாக ஒரு விடயத்தைச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் ஒரு தரப்பென்ற ரீதியில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பேணுவது சம்பந்தமாகவும் மக்களின் மனிதாபிமான தேவைகளைத் தீர்ப்பது சம்பந்தமாகவும் தீர்க்கமான பதிலை எடுக்க வேண்டும். அல்லாது விட்டால் சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டைத் தீர்க்கமாக எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதையும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறோம்.

**இன்றைய சந்திப்பு எந்தளவில் முக்கியத்துவம் பெற்றது?**

இன்றைய சந்திப்பு மிக மிக முக்கியமானதாக இருந்தது. இன்று ஏற்பட்டுள்ள மிக ஆபத்தான நிலை பற்றி பேசப்பட்டது. யுத்தநிறுத்த ஒப்பந்தம் உச்ச நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்ற சூழல். இரண்டாவது மக்களது அவசர மனிதாபிமானப் பிரச்சினைகள் தூக்கி எறியப்பட்டு மக்கள் கொந்தளிப்பு நிலையை அடைந்திருக்கிறார்கள். இந்த நிலை உட்பட பல்வேறு பாரதூரமான விடயங்கள் பற்றி அனைத்தையும் பேசி இருக்கிறோம். அரசும் படைகளும் எந்தளவில் சாதகமான பதிலைத் தருவார்கள் என்பது தெரியவில்லை. பொதுக் கட்டமைப்பு விடயத்தில் கூட தீர்க்கமான நிலை இல்லை. சிறிலங்கா அரசு இதை மேலும் மேலும் இழுத்தடித்து சிக்கலான நிலையை உருவாக்க முனைகிறது. இது மிகவும் ஆபத்தான நிலைக்குக் கொண்டு போகப் போகிறது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறோம்.

**பொதுக்கட்டமைப்புப் பற்றி அரசிடம் இருந்து தகவல்கள் எதையாவது நோர்வேத் தரப்பு எடுத்து வந்ததா?**

எந்தத் தகவலேனும் இல்லை. பொதுக் கட்டமைப்புக்கு சனாதிபதி கண்டி மாநாட்டுடன் ஒப்பமிடுவார் என்ற செய்தி முதல் வந்தது. பின்னர் வெளிநாட்டுப் பயணம் முடிந்தவுடன் ஒப்பமிடுவார் என்று வந்தது. இப்படியே நாட்கள் நகர்கிறது. நெருக்கடிகள் உச்சமடைகிறன. ஒப்பமிடுகிறார்களா இல்லையா என்பதைக் கூறாவிட்டாலும் நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன. ஆகவே சர்வதேச சமூகம் ஒரு தீர்க்கமான நிலையை எடுக்க வேண்டிய கட்டத்துக்கு வந்திருக்கிறது.

**திருமலையில் புலிகள் விமானப் படைத்தளம் அமைப்பது பற்றி செய்திகள் வெளியாகியிருக்கின்றது இது பற்றி?**

தெற்கில் இப்படிப் பல செய்திகளைப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். புலிகளிடம் கடற்படை, விமானப்படை, தரைப்படை போன்ற படைக்கட்டுமானங்கள் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது என்பது ஒரு புதுமையான விடயம் அல்ல. இவற்றை வைத்துக் கொண்டு சிறிலங்கா அரசு தனக்கிருக்கின்ற பொறுப்பு, சர்வதேச அழுத்தம் என்பவற்றைத் திசை திருப்பும் வகையில் இத்தகைய கதைகளைப் பரப்பி திசை திருப்பப் பார்க்கிறார்கள். சர்வதேச சமூகம் இதைப் பெரிது படுத்தாமல் படைத்தரப்பு, அரசு செய்யவேண்டிய வேலைகளைச் செய்வதற்கு அவர்களுக்கு முழு அளவில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் இன்று வலியுறுத்தியிருக்கின்றோம்.

**யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அரசு ஆர்வம் காட்டுவதாக கருதுகிறீர்களா?**

படைத்தரப்பின் செயற்பாடு, அரசின் இழுத்தடிப்பு போக்கு அனைத்துமே இப்போதைய நிலையைக் குழப்பும் நோக்கில் திட்டமிட்டு செய்யப்படுவது போலத்தான் நாங்கள் உணர்கிறோம். ஏனெனில் கொலைகளும் யுத்தநிறுத்த மீறல்களும்அதிகரித்து விட்டன. அதைவிட பொருளாதாரத்தடை மக்களுக்கு மீண்டும் யுத்தகால நினைவுகளைக் கொண்டு வருவது போல உள்ளன. யுத்தகாலத்தில் எத்தகைய நெருக்கடிகள் இருந்ததோ அத்தகைய நெருக்கடிகளுக்கான சூழல்களைப் படைத்தரப்பும் அரசும் செய்துவருகிறது. இவற்றை வைத்து என்ன விடயம் நடக்கும் என்பதை ஊகிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

**புலிகளின் வான்படை விவகாரம் பற்றி இந்திய அரசு அதிக அக்கறை கொண்டிருக்கிறது. இலங்கை அரசுக்கு வான் வழியில் பாதுகாப்புத் தருவதாகவும் கூறியிருக்கிறது இது பற்றி?**

இதில் எவ்வளவு உண்மைத் தன்மை இருக்கிறது என்பதை என்னால் கூற முடியா விட்டாலும் இந்தியா கவலையடைய வேண்டிய தேவைஇல்லை. எங்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறோம். எங்களால் கட்டி எழுப்பப்படுகின்ற படைக்கட்டுமானங்கள் எதுவும் அயல் நாடுகளுக்கோ வேறு யாருக்குமோ அச்சம் ஏற்படுத்தும் வகையிலோ அது கட்டி எழுப் பப்படவில்லை. எங்களது சுயபாதுகாப்பிற்காகக் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. எனவே இந்தியா இந்தவிடயத்தில் அச்சமடையத் தேவையில்லை. அப்படியான தவறை இந்தியா செய்யாது என்றே நாம் நம்புகிறோம். இதற்கு ஆதரவளிப்பதன் மூலம் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்கின்ற படுகொலைகளை இந்தியாவும் ஏற்பது போல மாறிவிடும். தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக அரசு இது போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது. இலங்கை அரசை வலுப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் இந்திய அரசோ அல்லது வேறு நாடுகளோ ஈடுபடும் என நாம் நம்பவில்லை. எனவே இந்த விடயங்கள் பற்றி எதிர்காலத்தில் சர்வதேச சமூகத்துக்கு விளக்குவதற்குத் தீர் மானித்திருக்கிறோம்.

**அனைத்துத்தமிழ் கட்சிகளையும், பொதுக்கட்டமைப்பில் இணைக்க வேண்டும் என இந்தியா தெரிவித்திருக்கிறதே?**

இந்திய அரசின் அதிகாரபூர்வ செய்தியாக எமக்குக் கிடைக்கவில்லை. இப்படியாக தெற்கிலே உள்ள ஊடகங்கள் பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தி வருகின்றன. ஆனால் உத்தியோக பூர்வமாக எந்தத்தகவலும் கிடைக்கவில்லை. அண்மையில் நடைபெற்ற தேர்தல் மூலம் சனநாயக வழிமுறையில் அனைத்து தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளைத் தெரிவுசெய்துள்ளனர்.இவற்றை அறிந்து கொள்ளாமலும் புரிந்துகொள்ளாமலும் அறிக்கைகள் வருவது எங்களால் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறது.

**பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்களுக்கு இடமில்லை என சர்ச்சை எழுந்துள்ளதா?**

பொதுக்கட்டமைப்பை சனாதிபதி சிக்கலுக் குள்ளாக்குகின்ற நடவடிக்கையிலேயே தான் ஈடுபட்டிருக்கிறார். இதற்கு முஸ்லிம் மக்கள் பலியாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அனைவரதும் பொறுப்பு. பொதுக்கட்டமைப்பின் அமைப்பு பாதிக்கப்பட்ட மக்களுக்காகனது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் சரியான முறையில் பகிரப்படும என்பதில் எமது தலைமை உறுதியுடன் இருக்கிறது. ஆனால் சனாதிபதி இவற்றை மூடி மறைத்து மர்மப் பொருளாக்கி சர்ச்சையைக் கிளப்புவது ஏன் என்று தெரியவில்லை. இதன் மூலம் அனைவரும் குழப்பமடைந்து போகின்ற நிலை தோன்றியுள்ளது.

**தெற்கில் இராணுவமும் மரணமடைகிறார்கள். புலிகளும் மரணமடைகிறார்கள் இது பற்றி?**

இங்கே எப்படி நிழல் யுத்தத்தை இலங்கைப் படைகளும் புலனாய்வு அமைப்புக்களும் நடத்தியதோ அதை இப்போதுதெற்கிற்கும் நகர்த்திவிட்டார்கள் என்றுதான் மக்கள் நம்புகிறார்கள். தெற்கில் தான் ஆயுதக் குழுக்களின் முழு நடமாட்டமும் இருக்கிறது. என்பதை நாம் அண்மைக்காலமாக அறிந்து வருகிறோம்.

தற்பொழுது அங்கே நிகழ்ந்த கொலைகள் கூட அவர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் தான் காரணம். இதற்கும் புலிகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை. இவற்றுடன் எம்மைத் தொடர்பு படுத்தி சூழ்நிலையைச் சீகுலைக்கும் நோக்கம் என்பது தான் உண்மை.

**சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களின் நிலை என்ன?**

மிக மோசமான நிலையில் தான் உள்ளது. மக்களுக்கான இரண்டு கட்ட வேலைகளை மிகச்சிறப்பாக ஒழுங்குபடுத்திச் செய்திருக்கிறோம். மூன்றாம் கட்டப் பணிகள் அரசின் இழுத் தடிப்புப் போக்கால் செய்ய முடியாமல் உள்ளது.

**விடுதலைப் புலிகள் பொறுமை இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்களா?**

விடுதலைப் புலிகள் பொறுமை இழந்தார்கள் என்பதை விட ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பொறுமை இழந்துள்ளார்கள்.தமிழ் மக்கள் பொறுமைஇழக்கின்ற பொழுது தமிழ் மக்களை பாதுகாக்கின்றவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் சில தீர்க்கமான முடிவை எடுப்பது தவிர்க்கமுடியாத நிலையை உருவாக்கும்.

**ஜே.வி.பி அரசில் இருந்து விலகினால் தமிழ்க் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குமா?**

தமிழ்க் கூட்டமைப்பினிடம் கேட்கவேண்டிய கேள்வி அவர்களுடன் கலந்துபேசித்தான் இதற்கான பதிலைத் தரமுடியும் என்றார் அவர்.

முன்னதாக நேற்றுக்காலை விசேட உலங்கு வானூர்திமூலம் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேத்தூதுவர் கான்ஸ்பிறஸ்கார் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் உள்ளிட்டோரை சமாதானச்செயலகத்தைச் சேர்ந்த சுடர்மணி வரவேற்றிருந்தார்.

பின்னர் காலை பத்துமணிக்கு சமாதானச் செயலகத்தில் சந்திப்பு ஆரம்பமானது. இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தமிழீழக்காவல் துறைப்பொறுப்பாளர் ப.நடேசன், சமாதானச்செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் ஆகியோர் கலந்து கொண்டனர். (லோ)


## வரிவிளம்பரம்

### வீடு விற்பனைக்கு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன்ஒழுங் கையில் உள்ள 2ஏக்கர் காணியுடன் பெரிய கல்வீடு, கிணறு, மலசல கூட வசதிகளுடன் விற்பனைக குண்டு. தொடர்புக்கு:- திருமதி:பூமணி-தர்மலிங்கம். 3 ஆம்வட்டாரம், முள்ளியவளை. (6166)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உதயநகர் மேற்கு, இலக்கம் 200 இல் 1/4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- தங்கமதி நகைமாடம் திருநகர் வீதி, கிளிநொச்சி. (சி.12036)

### தவறிவிட்டது

வட்டக்கச்சியில் வசிக்கும் டார்வின் போஸ் நளாயினி என்பவரது நிரந்தர பயணஅட்டை வட்டக்கச்சி சுகுணா புடவைக் கடைக்கும் மாவடி அம்மனுக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது சுகுணா புடவைக் கடையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (6235)

# கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ஈராக்கில் 840 பேர் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கார்க்குண்டுத் தாக்குதல் மற்றும் அதிரடித் தாக்குதலில் கடந்த மாதம் மட்டும் அமெரிக்கப் படையினர் உட்பட 840 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து தீவிரவாதிகளை ஒடுக்க கூடுதல் அமெரிக்கப் படையினரும்,ஈராக் பொலிசாரும் பாக்தாத் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் பாக்தாத் நகரை இவர்கள் சுற்றி வளைத்து அதிரடி சோதனை நடத்தினார்கள். இந்த அதிரடி நடவடிக்கையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 900 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதாகவும் பாக்தாத் நகரில் 200இற்கும் மேற்பட்ட பதுங்குகுழிகள் அமைத்து அவற்றில் ஏராளமான ஆயுதங்கள்,வெடிகுண்டுகளை தீவிரவாதிகள் பதுக்கி வைத்து இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டு காவலில் இருக்கும் சதாம்ஹுசேன் மீது அடுத்த மாதம் விசாரணை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விசாரணை தொடங்கும் போது தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதலை அதிகரிக்கலாம் என்றும் அமெரிக்க இராணுவம் கருதுகிறது.



பாக்தாத்தின் சுலாப்பிதேசத்தில் இடம் பெற்ற கார்க்குண்டுத்தாக்குதலின் பின்னர் அந்த இடத்தை சூழ்ந்திருப்போருக்கு ஒரு அமெரிக்கப்படை வீரர் அறிவுறுத்தல் வழங்குகின்றார்.

# பாகிஸ்தானில் தொடரும் வன்முறைக்கு முஷாரப் புதிய விளக்கம் தெரிவிப்பு




(டுபாய்)

"பாகிஸ்தானில் நடக்கும் வன் முறைச் சம்பவங்கள் தீவிரவாத நடவடிக்கைகள் அல்ல. மதஉட் பரிவு மோதல்" என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் விளக்கமளித் துள்ளார். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் அபுதாபியில் பாகிஸ் தானியர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நாங்கள் தீவிரவாதம், மதப் பிரிவுணர்ச்சி ஆகிய பிரச்சினைகளைச் சமாளித்து வருகிறோம். நாட்டில் நடக்கும் வன்முறைச்சம்பவங்கள், வெடிகுண்டு சம்பவங்கள் தீவிரவாத நடவடிக்கைகள் அல்ல, மத உட்பிரிவு வெறுப் புணர்ச்சி மோதல், கொல்பவனும் முஸ்லிம். கொல்லப்படுபவனும் முஸ்லிம்.

இதேபோன்று மத உட்பிரிவு மோதலில் ஈடுபடும் மதரஸாக்களையும், அமைப்புக்களையும் பாகிஸ்தான் மக்கள் ஆதரிக்கக் கூடாது. அவற்றைக் கண்டிக்க வேண்டும். இவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டாம் என்று பாகிஸ்தானில் உள்ள உங்களின் உறவினர்கள், குடும்பத்தினரையும் கேட்டுக்கொள்ளுங்கள். மதக் காழ்ப்புணர்ச்சியைத் தூண்டும் சக்திகளுக்கு இரையாகிவிடாதீர்கள்.

பாகிஸ்தானின் வெளிநாட்டு பாதுகாப்பு , உள்நாட்டு பாதுகாப்புடன் தொடர்புடையது. இது போன்ற வன்முறைகளை ஒடுக்குவதன் மூலம் தான் வெளிநாட்டு பாதுகாப்பைப் பலப்படுத்தமுடியும். முதல் முறையாக இது போன்ற சம்பவங் களைப் பாகிஸ்தான் சந்திக்கிறது. சரியான பாதையில் செல்ல வில்லை என்றால், நாட்டின் வீழ்ச்சிக்கு அது வழிவகுக்கும் என்றார்.



கடந்த திங்கள் அமெரிக்க,ஈராக் படையினர் இணைந்து நடத்திய திடீர்த்தாக்குதலில் கொல்லப்பட்ட 56 வயதான வயோதிபரினதும் அவரது மனை வியினதும் உடல்களை ஏற்றிச்செல்லும் அப்பகுதி மக்கள.

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்: சீனா பகிரங்க எதிர்ப்பு

(பீஜிங்)

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு சீனா பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.**

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, பிரிட்டன்,பிரேசில், பிரான்ஸ், சீனா,ரஷ்யா ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாகவுள்ளன. பத்து நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக இந்த சபையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் தேர்வு செய்யப்படுகின்றன. ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினராவதற்கு இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகிய நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. ஐ.நா. சபையை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்போது ஐ.நா. பாதுகாப்புச் சபை விரிவுப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக எழுந்துள்ளது.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாவதற்கு பிரிட்டனும் பிரான்சும் ரஷ்யாவும் ஆதரவு அளித்துள்ளன. இந்தியா வீட்டோ அதிகாரம் இல்லாத நிரந்தர உறுப்பு நாடாவதற்கு ஒப்புதல் அளிக்கத் தயார் என அமெரிக்கா கருத்துத்தெரிவித்தது. இந்தக் கருத்தை இந்தியா ஏற்க மறுத்து விட்டது. இது நாள் வரைமௌனம் காத்த சீனா தற்போது பகிரங்க எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் சபையில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு நிரந்தர இடம் தரக்கூடாது என சீன வெளியுறவுத்துறை அமைச்சர் லீ ஜாயோசிங் தெரிவித்துள்ளார். இதே போல நைஜீரியாவும் பாதுகாப்புச் சபை விரிவாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

# சீனாவில் வெள்ளம் 120 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

மத்திய மற்றும் தெற்கு சீனாவில் பெய்துவரும் கடுமையான மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 120 பேர் பலியாகியுள்ளதாகவும் 63 பேரைக் காணவில்லை எனவும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விமானம் வீழ்ந்து நொருங்கியது வீதியில் சென்றவர் பலி

(டாக்கா)

பங்களாதேஷ் விமானப் படையைச்சேர்ந்த எப்-7 ரக விமானமொன்று நேற்று தலைநகர் டாக்காவில் விழுந்து நொருங்கியது. இவ் விபத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவர் பலியானார். மூன்று பேர் காயமடைந்தனர்.

# மெக்சிக்கோ நாட்டு எரிமலை 5கி. மீற்றர் உயரத்திற்கு சீற்றம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவின் கஸ்மன் நகரில் உள்ள கோலிமா எரிமலை கடந்த ஞாயிறன்று குழம்பை கக்கத் தொடங்கியுள்ளது. 5 கி.மீ. தூரத்திற்கு அது குழம்பைக் கக்கியது.

12 ஆயிரத்து 540 அடி உயரமுள்ள இந்த எரிமலை வெடித்ததில் உயிர்ச்சேதமெதுவும் ஏற்படவில்லை. கடந்த 15 ஆண்டுகளில் இத்தனை சீற்றத்துடன் இந்த எரிமலை வெடித்திருப்பது இது தான் முதல் முறை எனத்தெரிவிக்கப்படுகிறது.



பாக்தாத்தில் அமெல் மாவட்டத்தில் தமது தலைமையகத்தின் மீது தற்கொலைக் குண்டு தாரிகளின் தாக்குதலைத் தடுக்கும் நடவடிக்கையில் காயமடைந்து வைத்தியசாலையிலுள்ள சகாக்களிற்கு பாதுகாப்பளிக்கும் ஈராக்கியப் பொலிஸ் கொமாண்டோக்கள்.

# நோர்வேயின் 100ஆவது பிறந்தநாள்

(ஒஸ்லோ)

சுவீடனலிருந்து 1905 ஆம் ஆண்டு நோர்வே தனி நாடானது. நேற்று (ஜுன். 7ஆம்திகதி ) அதன் 100ஆவது பிறந்த நாள் விழாவாகும்.

இந்த நாட்டில் கிடைக்கும் பெற்றோல் இதை உலகிலேயே வளமான நாடாக மாற்றியுள்ளது.

இது ஐரோப்பிய ஒன்றியத்தில் சேராமல் தனித்து நிற்கிறது. அண்டை நாடுகளான சுவிடன் பின்லாந்து டென்மார்க் ஆகிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்துள்ள போதிலும் இது தனித்து இயங்குகிறது.



ஈராக் தீவிரவாதிகளின் ஆயுதக்கிடங்கொன்றை கைப்பற்றியதாகக் கூறும் அமெரிக்கப் படையினர் அவ் ஆயுதங்களின் ஒரு தொகுதியை உதைபந்தாட்ட மைதானம் ஒன்றில் வைத்து காட்சிப்படுத்தினர்.

# குவைத் மாநகராட்சியில் பெண்களுக்கு இடம்

(டுபாய்)

பெண்களுக்கு தேர்தலில் போட்டியிடும் உரிமையை குவைத் நாட்டு பாராளுமன்றம் கடந்த மே மாதம் 16ஆம் திகதி வழங்கியது.இதைத்தொடர்ந்து மாநகராட்சி மன்றத்தில் இரண்டு பெண்களுக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது. குவைத் அமைச்சரவை இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது. அரச குடும்பத்து பெண்ணான பாத்திமா அல்சபா, பொறியியலாளரான பப்சியா அல்பகர் ஆகியோர் மாநகராட்சி உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

குவைத்தில் இரண்டு பெண்கள் மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பது புரட்சிகரமான நடவடிக்கையாக கருதப்படுகிறது.

# பேருந்து மீதான கண்ணிவெடித் தாக்குதல் தவறாக நடந்ததென மாவோயிஸ்ட் அறிவிப்பு!

(லண்டன்)

நேபாளத்தில் பேருந்து மீதான நிலக் கண்ணி வெடித் தாக்குதல் தவறுதலாக இடம் பெற்ற ஒன்று என மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

அரச படையினரை இலக்கு வைத்தது இந்தத் தாக்குதல் நடத்துப் பட்டதாக அவ் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேபாள முடியாட்சிக்கு எதிராக 1996 இல் கிளர்ச்சிக் காரர்கள் தமது தாக்குதலை ஆரம்பித்த பின்னர் இடம் பெற்ற பொதுமக்களுக்கு எதிரான மிகவும் மோசமான தாக்குதலில் இதுவும் ஒன்றாகும்.

இந்தத் தாக்குதல் நேபாளத்திலும் வெளிநாடுகளிலும் பொரும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.நேற்று முன்தினம் இடம் பெற்ற மேற்படி தாக்குதலில் 50இற்கும் மேற்பட்டோர் இறந்தும் 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



அறுபாவில் ஒரு கல்விச் சுற்றுலாவில் அலபாமா உயர் பாடசாலைப்பட்டதாரிகள் காணாமற் போனதையடுத்து பொது மக்களை உள்ளடக்கிய ஒரு தேடுதற்குழுவை போத்துக்கால் கடற்படையினர் வழிநடத்துகின்றனர்.

# ஓவியர் புகழேந்தியின் கலைப்பயணம்

# ஒரு போராட்டப் பயணம்

## -க.வே.பாலகுமாரன் புகழாரம்



(அலுவலக செய்தியாளர்)

**ஓவியர் புகழேந்தியின் கலைப்பயணம் என்பது ஒரு போராட்டப்பயணம். அவரது ஓவியங்களில் கலைக்கோட்பாடு, அரசியல், வாழ்க்கை நெறிப்பாடு என்பன மிகப் பெரும் பரிணாமத்தைக் கொண்டது. இவரின் ஓவியங்கள் சபிக்கப்பட்ட மக்களின் இருண்ட பக்கங்களை வெளிக்கொண்டுவருவதாகவுள்ளது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.**

கிளி.பண்பாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற ஓவியர் புகழேந்தி அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் நாட்டில் ஏற்பட்ட இடை வெளியை ஓவியர் புகழேந்தி அவர்கள் நிரப்பியிருக்கிறார். அவரின் முன்னர் வீர சந்தானம் நிரப்பியிருந்தார். அதனை நாம் மறந்து விடமுடியாது. புகழேந்தி எங்களுடன் கூடவே அலைந்தும், திரிந்தும், வருகிறார். அவர் களைப்படையாது, சலிப்படை யாது முடிவற்ற பயணமாக கலைப் படையலாக எங்களுடன் வருகிறார்.

புகழேந்தியின் கலைப்பயணம் என்பது ஒரு போராட்டப் பயணம். அவரது ஓவியங்கள் அரசியல் கலைக்கோட்பாடு, வாழ்க்கை நெறிப்பாடு மிகப்பெரிய பரிணாமத்தைக் கொண்டது. அவை சபிக்கப்பட்ட மனிதனது இருண்ட பக்கங்களை வெளிக்கொண்டுவருபவதாகவுள்ளது. இருளினுள் அவரும் போயிருக்கிறார். இருளில் இருந்து ஒளியைப்பிறப்பிக்க கடுமையாக முயல்கிறார். சமாந்தரமான காலத்தில் தனிமனித நெருக்கடிகளைத் தவிர்த்து சமுகத்தின் நெருக்கடிகளை முன்நிறுத்தி அவற்றுக்கான வழியைக் காண்பதற்குத் துடிக்கிறார்.


மக்கள் ஓவியத் தொடர்பின் சங்கிலியாக இந்த யுகத்தில் எம்முன் தோற்றமளிக்கிறார். பரந்துபட்ட உலகின் தார்மீக ஆதரவை தனது கலைப்படையலூடாக அவர் எங்களுக்கு வழங்குகிறார். இந்தச் செயல் விடுதலைப்போராட்டத்தின் தர முயர்த்தல் செயற்பாடு என்று தான் நான் சொல்வேன்.

புகழேந்தியின் ஓவியங்கள் எங்களை மிரட்டவில்லை. அவற்றைப் புரியமுடிகிறது. தெளிவான செய்தியை சொல்கின்றன. அவரின் ஓவியத்தினுள் கலைநேர்த்தியும், புதிய கலைவரவின் பிரதிபலிப்பும், நவீன யதார்த்தத்தினுடைய தெளிவான நிலைப்பாடும் இருப்பதைப் பார்க்கின்றோம்.

தமிழ்பாரம்பரிய வாழ்க்கை முறையைத் தொகுத்து ஓவியங்கள் ஆக்க வேண்டிய கடப்பாடு அவரிடமுள்ளது. எங்களது போராட்டத்தின் ஒரு பக்கத்தை நிவர்த்தி செய்திருக்கிறார் என்பதன் ஊடாக அவரைப் போற்றுகின்றோம்.

ஓவியர் அவர்கள் கலைத்தூதராக மாத்திரம் எங்களிடம் வரவில்லை. ஒரு உணர்வின் நட்பின் இழையாக உணர்வின் களத்தில் எங்களுடன் நிற்கிறார். இவர் ஓவியம் வரைவதில்லை, கீறுவதும் இல்லை. ஓவியம் எழுதுகிறார். எழுதுகிறதுபோல வரைகிறார்.

எங்களுக்குத் துணைபோக வேண்டிய நாடு தடையாகிவிடுமோ என்ற பயம் எல்லோர் மத்தியிலும் இருக்கிறது. இது தொடர்ந்து நிலவிவருகிறது. அவர்களின் வெளிப்படையான நிலைப்பாடு என்ன? மறைமுகமான நிலைப்பாடு என்ன? என்பது பலருக்குத் தெரியாது. எங்களைப்பற்றி இந்தியாவுக்கு என்றைக்கும் பயம்வேண்டாம். நாங்கள் என்றைக்கும் நல்ல நண்பர்களாக இருப்போம் என்றார் அவர். (லோ,தீ)



*கிளிநொச்சி உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதி திருத்த வேலைக்கென பறிக்கப்பட்ட கிரவல் பரவப்படாது பல மாதகாலமாகக் கிடைப்பதன் காரணமாக பாதசாரிகள் இரவு நேரங்களில் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் வீதியில் பறிக்கப்பட்டு பரவப்படாதுள்ள கிரவல் கும்பியினைப் படத் தில் காணலாம்.*

*(படம்–சோதி)*

# மூன்று கிராமங்களில் நியாப் தேவைப் பகுப்பாய்வு

(முல்லை)

பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினரால் நியாப் திட்டத்தின் தேவைப் பகுப்பாய்வு மூன்று கிராமங்களில் நடைபெற்றது.

கடந்த 28ஆம் திகதி அன்று ஆறுமுகத்தான் குளக் கிராமத்திலும், 30 ஆம் திகதி முறிப்புக் கிராமத்திலும், 31ஆம் திகதி புதரிகுடா கிராமத்திலும் நடைபெற்றது.

கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே இந்த தேவைப்பகுப்பாய்வு நடைபெற்றது.

இதில் நியாப் திட்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் சிவகுமார், கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் அ.சோதிநாதன், முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர் சுரேஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த றொபேட் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (20)

# சிறுவர்களுக்கான ஆங்கில பாட முன்பள்ளி அமைப்பதற்கான கலந்துரையாடல்

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேசத்தில் சிறுவர்களுக்கான ஆங்கில பாட முன்பள்ளி அமைப்பதற்கான முன்னோடிக் கலந்துரையாடலும், அமைப்புக்குழு தெரிவும், கடந்தவாரம் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.கே மகாலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

மேற்படி கலந்துரையாடலில் முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி கை.சுதர்சன், முல்லை மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி து.வி ஜெயகுலராசா, முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை. மாவட்ட கடற்புலி அரசியல் துறைப் பொறுப்பாளர் ரங்கன், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தலைவர் குகதாசன், கரைதுறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் சோதிநாதன் மற்றும் கிராம சேவையாளர்கள், நலன் விரும்பிகள், கல்விமான்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டு கலந்துரையாடி அமைப்புக்குழு வினர்களையும் தெரிவு செய்தனர். இதன் தலைவராக மகாலிங்கமும், செயலாளராக ம.கமலகாந்தனும், பொருளாளராக இலங்கை வங்கி முல்லைத்தீவு ஓய்வு பெற்ற கணக்காளர் தாமோதரம்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் ஆங்கில முன்பள்ளி அமைபுக்கான காணியினை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் வழங்குவதாகவும், முன்பள்ளி கட்டடத்தினை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகம் கட்டித்தருவதாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், வெளி நாடுகளிலுள்ள இப்பகுதி உறவுகள் பல வழிகளாலும், உதவிவழங்குவதாகவும், உறுதியளிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவானது. (ஆ)

# சர்வதேச மட்டத்தில் த. வி.போராட்டம் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது

## -தூயவன் அரசறிவியற்கல்லூரி விரிவுரையாளர்

எமது வாழ்வுரிமையைக் வென்றெடுப்பதற்காக நாம் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக இரத்தம் சிந்திப்போராடினோம். விடாப்பிடியாகப் போராடினோம். ஏனெனில் அதைவிட நாம் வாழ்வதற்கு எமக்கு வேறு வழியே இருக்கவில்லை. இதன் விளைவாக எமது போராட்டம் இன்று சர்வதேச மட்டத்தில் புரிந்துகொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப்புலிகளின் தூயவன் அரசறிவியற்கல்லூரி விரிவுரையாளர் புலிமறவன் அவர்கள். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற சமகால அரசியற் கருத்தரங்கில் கலந்து கொண்டு மக்களுடனான கருத்துப் பகிர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; இன்று இலங்கை அரசியலைப் பொறுத்தவரையிலும் அனைத்துத் தரப்பினரதும் வாய்களிலிருந்தும் உதிர்க்கும் வார்த்தைகளிலும் திரும்பத்திரும்ப ஒன்றாகவே வருகிறது. இது ஒருவிடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை அபாயமான ஒரு கட்டமாகும். இவ்வாறு எமது தலைகளில் எவரும் மிளகு அரைக்க நாம் அனுமதிக்க முடி

சிங்கள தேசத்தின் இத்தகைய இழுத்தடிப்புக்கள் அவர்கள் தமிழர்களோடு சேர்ந்து வாழ்வதற்குத் தயாரில்லை என்பதையே சுட்டிநிற்கிறது. இது எமது மக்களுக்கு ஒரு புதுமையான விடயமல்ல. ஆனால் அதைச் சர்வதேசத்தின் முன்னிலையில் கொண்டு சென்றதுதான் நாம் இச் சமாதான காலகட்டத்தில் புரிந்த சாதனையாகும்.

இத்தகைய நிலையில் நாம் இனியும் பொறுமை காக்கமுடியாது. எமது விடுதலைப்போரை முன்னெடுத்து ஒரு முடிவிற்கு வருவதே சிறந்ததென நீங்கள் அனைவரும் துடித்தபடி இருக்கிறீகள். இதனூடாக முன்னெடுக்கப் படும் அனைத்து முன்னெடுபுக்களும் எமது தலைவிதியை நிர்ணயிப்பதாக இருக்கும் என்பதே உண்மையாகும் என்றார் அவர். (லோ)

# சாரணர் வேலை வார கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

சாரணருக்கான வேலை வாரம் இலங்கை முழுவதும் இம்மாதம் நடைபெறுவதால் எமது மாவட்டத்திலும் இதை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளோம். இதன்படி முல்லை வலயக்கல்விப்பணிமனையில் இதற்கான கலந்துரையாடல் சேவை பட்டிவம், சந்தாவுக்கான சின்னம் வழங்கல் நாளை மு.ப 10.30 மணிக்கு வலயக்கல்விப்பணிமனை வளநிலையத்தில் நடைபெறும் முல்லை. வலய பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் (சாரண) தவறாது கலந்து கொள்ளவும்.

துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த சாரண ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலும் வேலை வாரப்படிவம் வழங்கல் மாங்குளம் வலயக்கல்விப் பணிமனையில் எதிர்வரும் 13ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும் என்பதை முல்லை.மாவட்ட சாரணர் சங்கத்தலைவரும், முலலைக் கல்விப்பணிப்பாளருமாகிய ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார். (20)

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(முள்ளியவளை)

கடந்த மாதம் 23ஆம் திகதி அன்று நடைபெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் போது கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் முள்ளியவளை காவல்துறை பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு காவல்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளின் விபரம் சிறிசுரேந்திரன் - ஜெயரூபன் அ.அ.இலக்கம்:- 842284031v கிருஸ்ணதுரை-தெய்வானைப்பிள்ளை அ. அ. இலக்கம்:-457542526v, வாமதேவன் குகதாஸ் வேலணை கிழக்கு மாணவர் அடையாள அட்டை தேவராசா ஜெகராசு அ. அ. இலக்கம் 821115710v ஆறுமுகம் சிவானந்தம் அ.அ.இலக்கம் 763262073v, குலக் கொழுநது லிகிந்தினி 795344071v ஆகியவற்றுடன் ஆண்களுக்குரிய கைக்கடிகாரம் ஒன்றும் பெண்களுக்குரிய கைக்கடிகாரம் ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் உரியவர்கள் ஆதாரப்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஆ)

# முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அருகாமை துர்நாற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அருகாமையில் நீர் தேங்கி நின்ற இடத்தில் மீன்கள் இறந்துள்ளதால் அந்தப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. முல்லைத்தீவில் சுனாமிக்கு பின்புஏற்பட்ட கடுமையான வெப்பமே இதற்குக்காரணமென வைத்தியசாலைப்பணியாளர் தெரிவிக்கின்றார்.

இவ்வீதியால் செல்லமுடியாது துர்நாற்றம் வீசுகின்றது. இதனை எவரும் துப்புரவு செய்வதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (20)

# இல.இல் இரு இராணுவங்கள் இருப்பதை உலகம் இன்று ஏற்றுக்கொண்டுள்ளது!

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

**எமது உரிமைப்போராட்டம் சனநாயக மரபில் இருந்து தோற்றம் பெற்று ஆயுதரீதியான உரிமைப்போராட்டமாக வடிவம் பெற்று இன்று மரபு வழிப்படையணியைக் கொண்டதாகப் பரிமாணம் பெற்றுள்ளது. இலங்கைத்தீவில் இன்று இரு இராணுவங்கள் உண்டு என்ற உண்மையை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளதென யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.**

தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறை செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்திஜீவிகளுடனான சந்திப்பின்போது கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஒரு விதை மரமாகி, மண்ணில் மலர்ந்து விருட்சமாக, எழுந்து விழுதுகள் மண்ணில் படிந்த வரை இந்தப் போராட்டத்தின் கற்பக விருட்சமாக கலங்கரை விளக்காக எமது மக்களே விளங்கியுள்ளார்கள்.

இதனாலேயே உலகின் நான்காவது வல்லரசான இந்தியப் படைகளுடனும், இலங்கையில் தமிழ்மக்களின் உயிர்களை நரபலி எடுத்து கொலை வேட்டையாடிய சிறிலங்காப் படைகளையும் சமகாலத்தில் போராடி நாம் இராணுவச் சமநிலைகளை ஏற்படுத்திக் கொண்டோம். ஆனால் கொண்டு வரப்பட்ட சமாதான காலம் என்பது நிரந்தர அமைதியும் இன்றி, நிரந்தரத் தீர்வும் இன்றி, நிம்மதியான வாழ்வும் இன்றி எமது மக்களை ஒரு இக்கட்டான சூழலில் தள்ளியுள்ளது. பொதுக் கட்டமைப்போ, இடைக்கால நிர்வாக அலகோ பந்து போன்று உதைபடும் பரிதாப சூழலில் சிங்கள அரசு பழமைவாதத்திற்குள்ளும் இனவாத அரசியலுக்குள்ளும் இன்று தள்ளப்பட்டுள்ளது. எமது உரிமை தொடர்பான எந்தவொரு ஏற்பாடுகளும் சிங்கள அரச கருமங்களுக்கு முன்னால் துக்கிலிடப்பட்ட நிலையிலேயே இன்று உள்ளது. மக்களும் அரசின் குரோதப் போக்கை, ஏமாற்றும் தந்திரங்களை விளங்கிக் கொண்டுள்ள நிலையில் ஒரு இறுதி முடிவை நோக்கி எதிர்கொள்ளும் சூழலை நோக்கி தமிழ் மக்கள் விரைந்து வருகின்றார்கள். மக்களின் பரந்துபட்ட எழுச்சியே எமது உரிமைகளின் இலக்கை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தியுள்ளது. இந்த இக்கட்டான தருணத்தில் மக்கள் அணிகளை மறுசீரமைத்து எதிரிகளால் எம்மக்கள் எதிர்கொள்ளும் சொல்லொணாத் துன்பங்களை துயரங்களை மக்களிடம் கொண்டு செல்லும் வடிகாலாய் எமது புத்திஜீவிகள் விளங்குவார்கள். அப்பணியே எமது மக்களின் விடுதலையை விரைவுபடுத்தும் என்றார். (28)

## "ஆசிரியர்களின் உரிமை" யாழ்.இல் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கையில் ஆசிரியர்களின் உரிமை எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற இக்கருத்தரங்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் பஞ்சலிங்கம் தலைமையில் கடந்த சனிக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது.

இதில் பிரதம விருந்தினராக இன்ர நசனல் பிரட்ரிக் ஈபோர்ட் மன்றத்தின் இலங்கைக்கான பிரதிநிதி செல்வி.அரிஸ்ட் பெக்கர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும்,பிரட்ரிக் ஈபோர்ட் மன்றத்திற்கும் இடையேயான உறவு 25 வருடமாக இருந்து வருகின்றது. இந்த இரு ஸ்தாபனங்களும் இணைந்து 25 வருடகாலத் திற்குள் பல கல்விக் கருத்தரங்குகளையும், பயிற்சிப்பட்டறைகளையும், அமர்வுகளையும் ஒழுங்குபடுத்தி நடாத்தி பல வெற்றிகளையும் கண்டுள்ளது. (சு)

## காரைநகரில் குடிநீர்த் தட்டுப்பாடு பொது மக்கள் பல மைல்கள் அலைச்சல்

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகரில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு கடந்த சில வாரங்களாக காணப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் வெப்ப நிலை மற்றும் குடிநீர் கிணறுகளில் நீர் வற்றிச் செல்கின்றமை, குடிநீர் கிணறுகள் உப்பு நீராக மாறிக் கொண்டு இருக்கின்றமை என்பனவே இதற்கான காரணங்கள் ஆகும். குறிப்பாக பலகாடு, ஊரியான், பொன்னாவளவு, தோப்புக்காடு, நீலங்காடு, வேம்படி, வாரிவளவு கருங்காலி, பாலாவோடை, பிட்டியெல்லை போன்ற கிராமங்கள் பெருமளவில் குடிநீர் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளன.

இப்பகுதியில் உள்ள மக்களுக்கு குடிநீர் வசதிகளை காரைநகர் பிரதேச சபையோ அன்றி உதவி அரசாங்க அதிபர் அலுவலகமோ செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இம் மக்கள் நோய் அபாயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய அபாய நிலை ஏற்படும். தற்போது இம் மக்கள் பல மைல் தூரம் சென்றே நீரைப் பெற்று வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

## கைதடியில் வீதித்திருத்தத்திற்கு இறக்கப்பட்ட கற்கள் திருட்டு

(தென்மராட்சி)

கைதடிப்பிரதேசத்தில் வீதிகள் திருத்தம் செய்வதற்கென பறிக்கப்பட்ட கற்கள் இரவோடு இரவாகத் திருடப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சாலை திருத்த வேலைகள் தாமதப்படுவது திருடர்களுக்கு கற்களை அள்ளிச் செல்வதற்கு கால அவகாசத்தை அளித்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இது குறித்து உடனடியாக கவனத்தில் எடுத்து சாலைகளை புனரமைக்கும்படியும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

## தமிழக மீனவரின் பறிமுதலான படகுகள் தீவக போக்குவரவுக்குப் பயன்படுத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தீவுப்பகுதிகளிக்கிடையேயான போக்குவரத்தினை சீர் செய்ய ஏதுவாக இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறிப்பிரவேசித்த வேளை பறிமுதல் செய்யப்பட்ட நான்கு இந்திய மீன்பிடிப் படகுகளை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

வெவ்வேறு காலப்பகுதிகளில் இலங்கைக்கடற்பரப்பினுள் அத்துமீறிப்பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டதாகக்குற்றம்சாட்டி 52 மீன்பிடிக்கலங்கள் யாழ். மேல் நீதிமன்றின் உத்தரவின் பேரில் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட மீன் பிடிக்கலன்களில் காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் தரித்துவிடப்பட்டிருந்தது.

அவ்வாறு விடப்பட்டிருந்த வள்ளங்களில் ஆறினை இலங்கை கடற்படை கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சினூடாக பெற்றுக்கொண்டிருந்தது.அதேவேளை அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட வள்ளங்களில் நான்கு தற்போது தீவுப் பகுதிகளுக்கான பயணிகள் போக்குவரத்திற்கு ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பயணிகள் சேவைக்கென வழங்கப்பட்ட நான்கு வள்ளங்களும் நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு பகுதிகளிற்கிடையேயான சேவையில் ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம் மீன்பிடி வள்ளங்களை பயணிகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைப்பது தொடர்பாக ஆராய்ந்த மீன்பிடி மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் பொறியியலாளர் குழு கொழும்பு திரும்பியுள்ளது.

இக் குழுவின் சிபார்சில் விரைவில் திருத்தப்படும் மீன்பிடிவள்ளங்கள் உடனடியாக பயணிகள் சேவைக்கு வழங்கப்படுமென கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலக உதவிப்பணிப்பாளர் ரி. தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (27)

## சமுர்த்தி அதிகார சபையால் கிராம அபிவிருத்திக்கு நிதி ஒதுக்காததால் கொடிகாமம் மக்கள் விசனம்

கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி, சமுர்த்தி வங்கிச்சங்கம் மூலமாக சமுர்த்தி அதிகாரசபையால் கிராமங்கள் அபிவிருத்தி செய்வதற்காய் ஒதுக்கப்படும் நிதிகள் கடந்த இரண்டு வருடங்களாக வழங்கப்படாமை குறித்து பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் வீதிகள் புனரமைப்பு, குடிநீர் கிணறுகள் அமைத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல் போன்ற செயற்திட்டங்கள் கடந்த இரண்டு வருடங்கள் நடைபெறாமைக்கு சம்பந்தப்பட்ட சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் சமுர்த்தி மகா சங்கத்தலைவர் போன்றோரின் அக்கறையின்மையும், அசமந்தப்போக்குமே காரணம் என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (28)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் கலந்துரையாடல்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவ்வைத்தியசாலை அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும், அபிவிருத்திக்குழு தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்வைத்தியசாலை அபிவிருத்தியில் அக்கறையுள்ள கல்விமான்கள், வர்த்தகர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் இதில் பங்கு கொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், ஒத்துழைப்பையும் வழங்குமாறு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (31)

## முன்பள்ளி கல்வி மேம்பாடு குறித்து விசேட கலந்துரையாடல்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

செல்வி. சிவதர்மிகா தலைமையில் முன்பள்ளி வலயச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் எதிர்கால முன்பள்ளிச் சிறார்களின் வளர்ச்சி, போசாக்கு, கல்வி மேம்பாட்டின் புதிய மாதிரிகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேசசபை செயலாளர் பாலச்சந்திரன், வடக்கு-கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒருங்கிணைப்பாளர் கணேசலிங்கம், மாவட்ட இணைப்பாளர், அன்சலின், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பாக்கியராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (28)



சேரன் வாணிபமும், வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனமும் இணைந்து மன்னார் கருங்கண்டலில் விற்பனை நிலைய மொன்றினை கடந்த ஞாயிறன்று திறந்து வைத்தனர். மேற் படி வியாபார நிலையத்தினை மன்னார் நகர பிரதேச செயலர் திருமதி. ஸ்ரான்லிடீமெல் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைப்பதனை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# சமாதான முயற்சியில் இனியும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளலாமா?

சமாதான முயற்சிகளில் இனியும் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கலாமா? இதுவே இன்று தமிழ் மக்கள் மத்தியிலுள்ள முக்கிய கேள்வியாகும். ஏனெனில் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை வைப்பதற்கான சமிக்கைகள் எவையும் தெரியாதது மட்டுமல்ல, யுத்த நிறுத்தத்தையே கேள்விக்குள்ளாக்கும் நிகழ்வுகளே அதிகரித்த போக்கில் காணப்படுபவையாகவுள்ளன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன். அதனை விரும்பாதவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறலாம் என பல தடவை கூறிவிட்டார். ஆயினும், எவருமே-குறிப்பாக ஜே.வி.பி யினர் அரசாங்கத்தை விட்டு வெளியேறவில்லை. மாறாக பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் சனாதிபதி கையொப்பமிடுவாரேயானால் அரசாங்கத்தைக் க்விழ்க்கத் தயங்கப்போவதில்லையெனக் கூறிக்கொண்டே அரசாங்கத்தில் ஜே.வி.பியினர் பங்கேற்று வருகின்றனர்.

2002 இல் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி தாய்லாந்தில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகிய போது முதலில் இடைக்கால நிர்வாக சபை குறித்தே கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசிய, அவசர தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும், அதிகாரங்கள் சிலவற்றை பகிர்ந்தளித்தல் தொடர்பானதுமாக இப்பேச்சுவார்த்தைகள் அமையுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தென்னிலங்கையில் பேரினவாதிக்ள் போட்ட கூச்சலினால் அன்றைய அரசாங்கம் அதிலிருந்து பின்வாங்கியது. ஆயினும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு விடுதலைப் புலிகளும் விட்டுக்கொடுப்புக்களைச் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகளில் உப குழுக்களை அமைத்தல் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மூன்று உப குழுக்கள் அமைக்கப்பட்டவையாயினும், அவற்றில் பாதுகாப்பு உபகுழு, அவசர மனிதாபிமானப் பணிகளுக்கான உபகுழு என்பன முக்கியத்துவம் மிக்கவையாக இருந்தன.

ஆயினும், இவ் உபகுழுக்களின் செயற்பாடுகளும் விரைவிலேயே முடக்கத்திற்குள்ளாகின. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடியானதும், அவசரமான மனிதாபிமான தேவைகளை நிறைவு செய்வதற்கான உபகுழுவிற்கான நிதி கையாளுகை தொடர்பான விடயத்தை அரசாங்கத் தரப்பு சிக்கலுக்குள்ளாகியதன் மூலம் அவ்உபகுழுவின் செயற்பாடு முடக்கப்பட்டது. இதேபோன்றே உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான இழுபறி காரணமாக பாதுகாப்பு உபகுழுவும் தனது செயற்பாட்டை இழந்தது. இந்நிலையில் யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களின் தேவைகள் உடனடியாக நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற நிலையில் அரசாங்கம் முன்வைத்த அதிகார சபைகள் தொடர்பான நகல்திட்டங்களுக்கு மாற்றீடாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான திட்டமொன்று விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து அடுத்த சுற்றுப்பேச்சுவார்த் தைகள் விரைவில் ஆரம்பமாகலாம் என்ற எதிர்பார்க்கை இருக்கையில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஐ.தே முன்னணி அரசாங்கம் கலைக்கப்பட்டது.

இந்நிலையில் சமாதான முயற்சிகள் தொடர்பாக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும், முடக்கத்திற்குள்ளாகிய நிலையில், அரசாங்கமும் மாறியது. புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமெனக் கூறி வந்தபோதும், அது யதார்த்தத்திற்கு ஏற்பவும், களநிலைக்கு ஏற்பவும் செயற்படத்தயாராக இருக்கவில்லை. சிறுபான்மை அரசாங்கமாக ஆட்சி அதிகாரத்திற்கு வந்தவர்கள் தமது அரசாங்கத்தை வலுப்படுத்துவதிலேயே குறியாக இருந்தனர்.

சுமார் ஓராண்டுகள் வரையில் இந்நிலை நீடித்த வேளையில்-கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி அதிகாலையில் இலங்கையை தாக்கிய சுனாமி பேரலைகளினால் இனப்பிரச்சினை தீர்வு விடயம் பின்தள்ளப்பட்டு சுனாமி அனர்த்தம் முக்கிய விவகாரமாகியது. நாட்டிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் விட சுனாமியால் பேரிழப்பைச் சந்தித்த மக்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்வதும் மறுவாழ்வளிப்பதும் அனைத்திற்கும் முந்திய தேவையாகியது.

இந்நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்தாயகப் பகுதியில் புனர்வாழ்வுப் பணிகளுக்கென பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. அதாவது சர்வதேச நாடுகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிதியுதவிகள் சமஅளவில் பகிர்ந்தளித்தல் மற்றும் புனர்வாழ்வுப்பணிகள் போன்றவற்றை கவனிக்கும் வகையில் இப்பொதுக் கட்டமைப்பு அமையும் என்பதாக இருந்தது.

ஆனால் இப்பொதுக்கட்டமைப்பு விவகாரமும் தற்பொழுது கேள்விக்குள்ளான தொன்றாகியுள்ளது. ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான திட்டத்தை முன்வைத்த போது அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக புலிகளால் ஏற்றுக்கொள்ளமுடியாத திட்டத்தை அரசாங்கம் முன்வைத்த போது-அது புலிகளால் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் தான் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளராக செயற்பட்ட நோர்வேத்தரப்பு பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நகல்திட்டமொன்றை முன்வைத்தது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு பெரும் அவலத்திற்குள்ளான மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் புனர்வாழ்வு உதவிகள் விரைவில் சென்றடைய வேண்டும் என்பதினால் விடுதலைப்புலிகளினால் நோர்வேயின் திட்டத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கும் சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் இதுவரை அங்கீகாரம் அளிக்கவில்லை.

ஆனால் இப்பொதுக்கட்டமைப்பின் அவசியம் சர்வதேச சமூகத்தினாலும், சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் நாடுகளினாலும் உணரப்பட்டதொன்றாகியுள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகநாடுகளும் அண்மையில் இந்தியாவும் தமது ஆதரவைத்தெரிவித்துள்ளன. ஆயினும், அரசாங்கத்தினால் இன்னமும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முன்னேற்றம் காண முடியவில்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் எனக்கூறிக்கொண்டாலும் அவர் அம்முயற்சியில் எத்தனை தூரம் முன்னேறுவார். அவர் அதற்காக எத்தகைய அர்ப்பணிப்புக்களைச் செய்யத்தயாராக இருப்பார் என்பது கேள்விக்குரியதே- ஏனெனில் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவதென்பது அவரது தற்போதைய அரசாங்கத்தின் எதிர்காலத்திற்குமட்டுமல்ல. அவரது எதிர்கால அரசியலுக்கும் சவால் விடுவது போன்றதாகும்.

சனாதிபதி சந்திரிகா சமாதானம் குறித்தும், அரசியல்தீர்வு குறித்தும் பேசிக்கொண்டாலும் எப்பொழுதும் தனது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்கும் நோக்குடன் செயற்பட்டவர் ஆகும். அவ்வாறு இல்லாதுவிடில் 1994 இல் சமாதானத்தை வலியுறுத்தி தேர்தலில் பெருவெற்றிகண்டபோது அவரால் சமாதானத்தையும், அரசியல்தீர்வையும் இலகுவிலேயே கொண்டு வந்திருக்க முடியும்.

அது மட்டுமல்ல, அதிகாரத்தில் அக்கறையற்றவராக சமாதானம் மற்றும் அதிகாரப்பகிர்விலும் அக்கறைகொண்டவராக இருந்திருப்பின் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுத்தபோது அதற்கு ஊக்கம் அளித்து ஒத்துழைப்பை வழங்கியிருக்க முடியும். அரசியல் யாப்பில் காணப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றை கலைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

அதாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்திலோ அதிகாரப் பகிர்விலோ அக்கறை கொண்டவராக இருந்ததுமில்லை. தனது அதிகாரத்தை விட்டுக் கொடுக்க தயாராக இருந்தவராகவுமில்லை.

இது மட்டுமல்ல சனாதிபதி சந்திரிகாவின் எதிர்காலத்திட்டங்களும், அவரால் பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் தனது தற்போதைய பேச்சுக்கு ஏற்ப செயற்படுவாரா? என்ற கேள்விகளையும், எழவைப்பதாகவுள்ளது. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா தனது பதவிக்காலம் முடிவடைந்ததும் அரசியலில் இருந்து ஓய்வு பெறும் நோக்கம் கொண்டவராக இல்லை.

சனாதிபதி சந்திரிகா இவ்வாண்டின் இறுதியுடன் பதவி விலகவேண்டுமென எதிர்க்கட்சிகள் கோருகின்றன. சந்திரிகா குமாரதுங்கவோ அடுத்த ஆண்டுடனேயே தனது பதவிக்காலம் முடிவடையும் என்கின்றார். ஆனால் இதில் எது நடந்தாலும் சனாதிபதி சந்திரிகா அரசியலில் இருந்து ஓய்வு பெறும் நோக்கம் கொண்டவராக இல்லை. சனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல்-இது தோல்வி கண்டு விட்டது-அன்றி அதிகாரங்களைக் குறைத்தல்-தற்போதைய முயற்சி-என்பனவற்றின் மூலம் அரசியலில் தொடர்ந்தும் இடம்பிடித்துக்கொள்ளவே அவர் முனைகின்றார். அதாவது சந்திரிகா சனாதிபதியாக இல்லாது விடினும் பாராளுமன்றத்தில் பிரதமராகவோ, எதிர்க்கட்சித் தலைவராகவோ இடம் பிடிக்கும் நோக்கம் கொண்டவராகவே உள்ளார். அதாவது சனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைந்ததும் அவர் கட்சி அரசியலில் இருந்து விலக விரும்பவில்லை. அதிகாரம் மிக்கபதவிகளை வகிக்கவே விரும்புகின்றார்.

ஆகையினால் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவகாரம் என்றால் என்ன? ஏனைய விடயம் எதுவாகிலும் சரி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது வாக்கு வங்கியைப் பாதிப்படையச் செய்யக்கூடிய எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் என்றோ ஆட்சிஅதிகாரத்தைக் கைவிட வேண்டிய சவால் நிறைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றோ எதிர்பார்ப்பதற்கில்லை.

இதனை ஜே.வி.பியும் நன்கே விளங்கிக் கொண்டுள்ளது. இதன் காரணமாக சனாதிபதி சந்திரிகா விருப்பமற்றவர்கள் வெளியேறுங்கள் எனக்கூறும் போதும் வெளியேறாமல் உள்ளது. விரும்பினால் சனாதிபதி வெளியேறட்டும் என்பது போன்று அது நடந்து கொள்கின்றது.



இவை ஒருபுறம் இருக்க அரசபடையினராலும், பௌத்த பேரினவாத சக்திகளாலும் தற்பொழுது நடைமுறையிலுள்ள போர்நிறுத்த உடன்பாட்டிற்கு எதிரான வகையிலும் நாட்டில் நிலவும் ஓரளவிலான சமாதான சூழ்நிலையைக் குழப்புவதற்கான முயற்சிகளும் முனைப்புப்படுத்தப்பட்டவையாகவுள்ளன.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பில் விடுதலைப்புலிகளுக்கெதிராக மறைமுகப் போர் ஒன்று நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கையில்-மற்றொரு புறத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான வகையில் விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாட்டிற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான செயற்பாடுகள் ஆயுதப்படைத்தரப்பில் முனைப்புப்படுத்தப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைச் செயலகங்கள் ஆயுதப்படைத்தரப்பினரின் சோதனைகளுக்கும், தாக்குதல்களுக்கும் உள்ளாகி வருவதோடு நிராயுதபாணிகளான போராளிகள் அச்சுறுத்தலுக்கும், தாக்குதலுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இதேசமயம் பௌத்த பேரினவாத சக்திகளோ, அமைதிச்சூழலைக் கெடுக்கும் வகையிலான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளன. திருமலை நகரில் புத்தர் சிலை நிறுவியமை இதை ஒத்த செயற்பாடாகவே கொள்ளத்தக்கதாகும். இச்சிலை விவகாரம் திருமலையின் அமைதியையே இன்று கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகியுள்ளது.

இந்த வகையில் ஒரு புறத்தில் யுத்த நிறுத்தத்திற்கும்-அமைதிச்சூழலுக்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளை சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும்-பௌத்தசிங்களப் பேரினவாத சக்திகளும் மேற்கொண்டிருக்கையில் மறுபுறத்தில் மனிதாபிமான அடிப்படையில் கூட தமிழ் மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்யக்கூடியதானதொரு பொதுக்கட்டமைப்பை உருவாகத் தயாராக இல்லாத நிலையில் தமிழ் மக்கள் சமாதானத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? அது தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்வதாகமாட்டாதா?

- ஜெயராஜ்

# 30-05-2005 / 05-06-2005




**30**

➡ திருமலை நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை விவகாரம் குறித்து எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்தும் இச்சிலை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அகற்றப்படாது போனால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

➡ சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரியவின் வாகன ஓட்டுனர் முகமட்பௌசன் அம்பாறை மாவட்டம் வீரமுனையில் வைத்து சுட்டுக் கொலை.

➡ யாழ். கைதடிப் பாலத்திற்கு சமீபமாக இடம் பெற்ற பேருந்து பாரவூர்தி விபத்தில் இரு யுவதிகள் உட்பட ஆறுபேர் காயம்.

➡ தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவின் மாவட்ட ரீதியான இல்ல மெய்வல்லுனர் போட்டி கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பம்.



**31**

➡ சிறிலங்கா இராணுவப் புலனாய்வு கட்டளையிடும் அதிகாரி மேஜர் துவாம் நிஷாம் முத்தலிப் நாரஹென்பிட்டியவில் வைத்து சுட்டுக் கொலை, இறப்பின் பின் லெப். கேணலாக புதவியுயர்வு.



➡ செட்டிகுளம் கல்லாறுப்பகுதியில் பேருந்து விபத்துக்குள்ளானதில் மூவர்பலி; 20 இற்கும் மேற்பட்டோர் காயம்.

➡ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் கட்டடப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்கள் எடுத்துச் செல்வதற்கு தடைவிதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு வாகரைப்பிரதேசத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியொன்று இடம் பெற்றது.



➡ தென்மராட்சி கரையோரக் கிராமமான காச்சாய்ப் பகுதியில் கிணற்றுள் இருந்த எறிகணை வெடித்ததில் ஒருவர் பலி; மூவர் காயம்.

➡ மூதூர் இறங்குதுறையில் மக்களுக்கும், படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

**01**

➡ அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றிலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட நிர்வாகத்துறை அலுவலகம் மீது இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டது.

➡ திருகோணமலை நகரில் மத்திய பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அப்புறப்படுத்த அரசுக்கு ஜூன் 15 வரை கால அவகாசம்

➡ வவுனியா ஓமந்தைப் பகுதியில் வைக் கப்பட்டுள்ள புத்தர்சிலை பகுதிக்குச் சென்ற வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தினருடனும், பொலிசாருடனும் பேச்சு நடத்தினர்.

➡ பொலநறுவை பொலிஸ்நிலையத்தில் பணியாற்றிய முன்னாள் ஊர்காவல் படைச்சிப் பாய் ஒருவரின் சடலம் செவனப்பிட்டிய காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் மீட்பு.

➡ வவுனியா, வைரவர் புளியங்குளத்திலுள்ள தனியாருக்கு சொந்தமான தொலைக் காட்சி அலுவலகம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் கைக்குண்டுத் தாக்குதல்.

**02**

➡ தமிழர் தாயகம் எங்கும் மாணவர் எழுச்சிநாள் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்பு.

➡ சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ் மக்கள் முழு அளவிலான நம்பிக்கையின்மையைக் கொண்டுள்ளனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பேணுவதில் சிறிலங்கா அரசுக்குத்தான் தார்மீகப் பொறுப்பு உள்ளது என கிளிநொச்சியிலுள்ள சமாதான செயலகத்தில் சுவிஸ்நாட்டு தூதுவருடனான சந்திப்பின் போது சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு .



➡ தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி றெஜி அவர்களுடன் சுவிற்சர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் பேனாடினோ றொக்காசோணி அவர்களும், அவருடன் கூட வந்த மார்ட்டின் ஸ்ரியு சிங்கரும் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் சுனாமி வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடினர்.

➡ மட்டக்களப்பு செங்கலடி பதுளைவீதியிலுள்ள கொடுவாமடு யுத்த சூனியப் பிரதேசத்தில் கிளைமோர் குண்டொன்று வெடித்தது.

➡ வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலிசாரைஸை சி.என்.என் தொலைக் காட்சிச் சேவையின் 25 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அமெரிக்க அட்லாண்டா மாநிலத்தில் இடம் பெற்ற விழாவில் சந்தித் துரையாடினார்.



➡ அம்பாறை மாவட்டம் காரைதீவில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உந்துருளியில் பயணம்செய்த தந்தையும், மகனும் காயம்

➡ சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்க மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக புதுடில்லி பயணம்.

➡ யாழ்.குடாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டு வரும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய ஒன்றியத்தின் உயர் மட்டக் குழு யாழ்ப்பாணம் வருகை.

➡ யாழ்.குடாநாட்டில் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக அவுஸ்திரேலியத் தூதுவர் கலாநிதி நொக்பிரரேஞ் யாழ். விஜயம்.

**03**

➡ திருமலையில் புத்தர்சிலை வைக்கப் பட்டமையையடுத்து அங்கு குவிக்கப்பட்ட சிறிலங்கா படையினரை வெளியேற்றக் கோரி தமிழர் தாயகப்பிரதேசம் ஹர்த்தாலினால் முற்றாக செயலிழந்தது.



➡ திருமலையில் சிறிலங்கா படையினர் சீனன்குடாவிலுள்ள மிட்சுபிசி சீமெந்து தொழிற்சாலை அருகே நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு தமிழ் இளைஞர் படுகாயம்.

➡ அம்பாறை மாவட்ட தம்பிலுவில் எனுமிடத்திலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறை அலுவலகம் விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்புக்கும் தேடுதலுக்கும் உள்ளானது.

➡ இஸ்லாமிய மதத்தையும், முஸ்லிம் மக்களையும் அவமதிக்கும் வகையில் செயற்படும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ்ஷையும், அமெரிக்க இராணுவத்தையும் கண்டித்து மாபெரும் கண்டப் பேரணியொன்று மருதமுனையில் இடம் பெற்றது.

➡ திருகோணமலை பாட்டாளிபுரம் கிராமத்தில் வைத்திய வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வந்த மக்களுக்கு திலீபன் மருத்துவமனையின் மூலம் சேவை வழங்கி யதற்காக தமிழீழத் தேசியத்தலைவருக்கு பாட்டாளிபுரம் மக்களால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

**04**


➡ வடமராட்சிப் பிரதேசம் உடுப்பிட்டியில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் முதியவர் ஒருவர் பலி.

➡ தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனைக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஆங்கில மொழிக் கல்வி நிறுவனம் இன்று ஒரு வளர்ச்சிப்படியை எட்டியிருக்கிறதென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆங்கில மொழிப்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறிய முதலாவது தொகுதி மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவிப்பு.




➡ பேராசிரியரும் பிரபல எழுத்தாளருமான செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் காலமானார்..

➡ தமிழகத்திலிருந்து தமிழீழத்திற்கு வருகை தந்துள்ள புகழ்மிக்க ஓவியர் புகழேந்தி அவர்களை கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியினர் கௌரவித்தனர்.



➡ இந்திய அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கத்துடன் எந்தவிதமான இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தையும் செய்து கொள்ள மாட்டாது. அத்துடன் எந்தவிதமான இராணுவ உதவிகளையும் வழங்காது என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோவிடம் தெரிவிப்பு.

➡ அம்பாறை மாவட்டம் கல்முனையில் புத்தர்சிலை ஒன்று இனந்தெரியாத நபர்களினால் அடித்து நொருக்கப்பட்டது.

➡ தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு நகர பிரதேச அரசியல் துறை அலுவலகம் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது.

➡ மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புற பிரதேசமான ரிதிதென்னையில் கருணா குழு முக்கியஸ்தர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

**05.**


➡ ஓமந்தை சோதனைச் சாவடியூடாக மட்டக்களப்பிற்கு செல்ல இருந்த 30 விடுதலைப்புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரின் அடாவடித்தனமான போக்கினால் பயணத்தை இரத்துச் செய்தனர்.

➡ அச்சுவேலி வாதரவத்தைப் பகுதியிலுள்ள கேதுவார் பிள்ளையார் கோவிலடிப் பகுதியிலிருந்த பற்றையொன்றினுள் இருந்து பொதுமகன் ஒருவரது சடலம் மீட்பு.

➡ வவுனியா ஓமந்தை பிள்ளையார் கோவிலடியில் இராணுவத்தினரினால் வைக்கப்பட்ட புத்தர்சிலை மர்மமான முறையில் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்பு மீண்டும் படையினரால் அதே இடத்தில் புத்தர்சிலை வைக்கப்பட்டது.

➡ யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள மூத்த விநாயகர் கோவில் பகுதியில் வைத்து முன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் உந்துருளியில் பின் தொடர்ந்து வந்தவர்களால் சுட்டுக்கொலை.

➡ தியாகி சிவகுமாரனின் 31ஆம் ஆண்டு நினைவு நாள் உரும்பிராலுள்ள சிவகுமாரனின் நினைவுச் சிலையடியில் அனுஷ்டிப்பு.



➡ கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்குளி நோக்கி சென்று கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

# சுவிசில் இடம்பெற்ற மாணவர் எழுச்சி நிகழ்வில்








# திருமலை நகரில் நிலைகொண்டுள்ள படையினர் அகற்றப்படமாட்டார்கள்

## சிறி. இராணுவ சிரேஷ்ட அதிகாரி தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் தற்போது மேலதிகமாக நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படமாட்டார்கள் என்று இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவே மேலதிக படையினர் அங்கு நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருக்கும் அந்த அதிகாரி, படைகளுக்கான தேவை அங்கு இருக்கும்வரையில் அவர்கள் அங்கு நிலைகொண்டிருப்பார்கள் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து கருணா வெளியேறிய பின்னர் வெலிகந்த பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவத்தின் 23ஆவது படைத்தலைமையகத்தின் கீழ் திருகோணமலையும் கொண்டுவரப்பட்டதாகவும், இப்போது இந்தப் படையணியைச் சேர்ந்த மேலதிக படையினரே திருகோணமலை நகரில் நிலை கொண்டிருப்பதாகவும் அந்த இராணுவ அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

திருகோணமலை நகரில் மேலதிகமாக நிலைகொண்டிருக்கும் படையினர் அங்கிருந்து வெளியேறவேண்டும் என்றுகோரி கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு எங்கும் பூரண கதவடைப்பு, பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே, பெயர் குறிப்பிடவிரும்பாத இந்த இராணுவ அதிகாரி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இவர்களது இந்தக் கோரிக்கைக்குச் செவி மடுத்தால் அடுத்து இராணுவத்தினரை ஆயுதங்களைக் கீழே போடுமாறு இவர்கள் கோருவார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பிரதேசங்களில் மேலதிக படைகளையோ, படைக்கலங்களையோ நிறுத்திவைப்பதை போர்நிறுத்த உடன்படிக்கை கட்டுப்படுத்த முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கும் அவர் இந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கே இடமில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

# சனாதிபதியின் விருந்தில் மொறகொட கலப்பு ஐ.தே.கட்சி பிரமுகர்கள் கடும் விசனம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமெரிக்க முன்னாள் அதிபர் பில்கிளிங்டன் ஆகியோருடனான விருந்தில் முன்னாள் அமைச்சரும், ஐக்கியதேசியக்கட்சி பிரமுகருமான மிலிந்த மொறகொட கலந்து கொண்டது இப்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த விருந்திற்கு விடுத்திருந்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்க முடிவு செய்திருந்தது. ஆனால் இதை ஏற்காமல் மிலிந்த மொறகொட விருந்தில் கலந்து கொண்டது அவரது கட்சியின் சகாக்களிடம் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கட்சியின் செயற்றிட்டப்படி நடக்காமல் அவரது சொந்த விருப்பிலேயே மிலிந்த செயற்படுவதாக குற்றம் சாட்டுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, துணைத்தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பை நிராகரித்திருந்தனர். இந்த விருந்தில் பங்கேற்காத ரணில் விக்கிரமசிங்க கொழும்பிலும் அன்று இருக்கவில்லை. சனாதிபதித்தேர்தல் தொடர்பான பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் சென்றுவிட்டார்.

மொறகொட மற்றும் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் டிரோன்ட் பெர்னாண்டோ ஆகியோர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இருக்கிற புகைப்படங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. இந்த விருந்திற்கு முன்னதாக சனாதிபதி சந்திரிகா, மிலிந்த மொறகொடவைத் தொடர்பு கொண்டதாகவும் சிறையில் இருக்கும் எஸ்.பி.தி ஸாநாயக்கவின் விடயம் தொடர்பாக ஆலோசனை நடத்த வருமாறு சனாதிபதி சந்திரிகா அழைத்ததாகவும் சில தகவல்கள் கூறின. ஆனால் மொறகொட தரப்பு இதை மறுத்துள்ளது.அதே நேரத்தில் இந்த விருந்தில் பங்கேற்பதற்காகவே தனது துருக்கிப் பயணத்தை மிலிந்த மொறகொட மாற்றி அமைத்ததாக மொறகொடதரப்பினர் கூறுகின்றனர். மிலிந்த மொறகொடவின் இந்தச் சந்திப்பு ஐக்கிய தேசியக்கட்சிக்குள் சலசலப்பை உருவாக்கி இருக்கிறது. இது எத்தகைய சிக்கலாக அக்கட்சிக்குள் வெடிக்கும் என்பது இனிமேல்தான் தெரியவரும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

# பொதுக்கட்டமைப்பு யோசனை முன்வைக்கப்பட்டால் ஆராயத்தயாராகின்றது ஐக்கிய தேசியக்கட்சி

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான யோசனைகளை, பிரதான எதிர்க்கட்சியான தம்மிடம் முன்வைத்தால் அது தொடர்பாக ஆராய்வதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பிரதிப்பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரழிவு புனர்நிர்மாண பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தம் வெகுவிரைவில், கைச்சாத்தாகவுள்ளதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்சஅத்தநாயக்க ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுவரை பொதுக்கட்டமைப்பு தொடர்பான வரைவு எதிர்க்கட்சியான எம்மிடமோ, அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பி. யிடமோ, முன்வைக்கப்படவில்லை.

எப்படியிருந்த பொழுதிலும், பொது கட்டமைப்பு குறித்து அரசாங்கத்தின் வரைவு எம்மிடம் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பாக ஆராய்ந்து, ஆக்கபூர்வமான யோசனைகளை முன்வைக்க தயாராகவுள்ளோம்.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு தொடர்பாக எமது யோசனைகள் சிலவற்றை தெரிவித்திருந்தோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாவதற்கு முன் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படலாம்

## -கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு)

சனாதிபதி விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்னர் அமைச்சரவையில் பல மாற்றங்களை கொண்டுவரவுள்ளதாக உயர்மட்ட அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சனாதிபதி பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்பு ஜே.வி.பியுடன் இறுதிச்சுற்றுப் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்தும் ஜே.வி.பியினர் பொதுக்கட்டமைப்பை எதிர்த்து வருவார்களாயின் சனாதிபதி ஜே.வி.பி.யின் நான்கு அமைச்சர்களையும் நீக்கி அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளார் என அரசியல் வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புவார இதழான சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்கிடம் சனாதிபதி பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக எடுத்துரைத்துள்ளார். இச்சந்திப்பில் போர் நிறுத்த உடன்படிக்கையில் விடுதலைப்புலிகளின் பொறுப்புக்கள் இக்கால பகுதியில் விடுதலைப்புலிகளின் இராணுவ வளர்ச்சி பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

கடந்த வாரம் சனாதிபதி கம்பகா மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கூட்டத்தில் தெரிவிக்கையில்; பொதுக்கட்டமைப்பு ஜே.வி.பி கூட்டணி அரசிலிருந்து விலகினாலும் கூட கைச்சாத்திடப்படும். ஜே.வி.பியுடன் கூட்டாக ஆட்சி புரிவது சாத்தியமற்று வருகிறது.உள்ளூராட்சி தேர்தலில் ஜே.வி.பி இல்லாமல் தனியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிட முடியும். ஜே.வி.பி யினரால் வழங்கப்பட்டுள்ள அதிகரித்த கோரிக்கைகளிலும் பார்க்க ஐ.தே.க.வுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை நிறுவலாமென தெரிவித்திருந்தது தெரிந்ததே.

இதற்கிடையில் ஜே.வி.பிஇற்கு ஆதரவாக சுதந்திரக்கட்சி அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் கொண்ட குழு ஒன்று பொதுக்கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லவேண்டாம் எனவும் அரசாங்கத்திற்கு ஆபத்தை ஏற்படுத்த வேண்டாம் எனக்கோரியும் கையெழுத்திட்டு சனாதிபதியிடம் மேன்முறையீடு செய்துள்ளனர்.

# பொதுக்கட்டமைப்பு குறித்து முஸ்லிம் கட்சிகள் நிபந்தனை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் தம்மால் விதிக்கப்படவிருக்கும் இரு நிபந்தனைகளுக்கு அரசு செவிசாய்க்காது விட்டால் அரசுக்கு அளிக்கும் ஆதரவைத் தாம் விலக்கிக்கொள்ளப்போவதாக முஸ்லிம்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. மேற்படி பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடும் வேளை தமது தரப்பு பிரதிநிதிகளும் சமுகமளிக்க இடமளிக்கவேண்டும் எனவும் பொதுக்கட்டமைப்பு பிராந்திய மட்டக் குழுக்களில் தமது தரப்பு பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க அனுமதிக்கவேண்டும் என்ற இரு கோரிக்கைகளே மேற்படி கட்சிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகளாகும்.

# ஐ.நா பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்;
# நான்கு நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு- அப்துல் கலாம்

(புதுடில்லி)

"நான்கு நாடுகளில் கடந்த 14 நாட்களாக மேற்கொண்ட பயணம் வெற்றிகரமாக முடிவடைந்தது. ரஷ்யா, சுவிற்சர்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் உக்ரைன் நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள நட்புறவு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்பெறுவது தொடர்பாக நடத்திய பேச்சு வார்த்தையும் வெற்றிகரமாக அமைந்தது" என இந்திய சனாதிபதி அப்துல்கலாம் கூறினார்.

பயணத்தை முடித்துக் கொண்டு உக்ரைனிலிருந்து விமானத்தில் டில்லி வந்த போது நிருபர்களுக்கு விமானத்தில் வைத்து அப்துல்கலாம பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கடந்த 14 நாட்களாக நான்கு நாடுகளில் தான் மேற்கொண்ட பயணம் மிகவும் திருப்திகரமாக இருந்தது. நான்கு நாட்டுத் தலைவர்களுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் உயரதிகாரிகள், விஞ்ஞானிகள் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்தன. அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் அந் நாடுகளுடன் மேற்கொள்ள வேண்டிய வர்த்தகம் குறித்து இரண்டொரு நாட்களில் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தில் விரிவாக எடுத்துரைப்பேன்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி பெறுவதற்கு ஆதரவு கேட்ட போது அதற்கு நான்கு நாடுகளும் சாதகமான பதிலைத் தந்துள்ளன. ஐஸ்லாந்து ஒப்புக் கொண்டது. சுவிற்சர்லாந்து இந்தியாவுக்கு வந்து விதிமுறைகள் மற்றும் அதற்குத் தேவையான விளக்கங்களை நன்கு படித்த பின் கண்டிப்பாக ஆதரவு தருவதாக ஒப்புக் கொண்டுள்ளது. உக்ரைனும், ரஷ்யாவும், இந்தியாவை ஐ.நா பாதுகாப்புச் சபையில் இணைக்க முடிவே செய்து விட்டன.

ரஷ்ய அதிபர் புட்டினுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 500 கோடிக்கு வர்த்தகம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. கதிரியக்க பௌதிகம் தொடர்பாக இணைந்து ஆராய்ச்சி செய்ய முடிவு செய்யப்பட்டது. இரு நாட்டின் கலாச்சார உறவுகள் பற்றி தெரிந்து கொள்ள ஆண்டுதோறும் 17 வயதிற் குட்பட்ட மாணவ மாணவியர்களை பரிமாற்றம் செய்து கொள்ள முடிவு செய்யப்பட்டது.



இந்திய மத்திய பிரதேசத்தில் சித்தோர்கார் மோல் நகரங்களுக்கிடையே ஓடும் விடுமுறைகால சிறப்பு புகையிரதம் நேற்றுமுன்தினம் தடம்புரண்டு விபத்திற்குள்ளானதில் 2பேர் பலியாயினர் 29பேர் காயமடைந்தனர்.

# இந்திய பெற்றோலிய அமைச்சர் பாகிஸ்தான் பயணம்

(புதுடில்லி)

இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் நான்குநாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் புகையிரதம் மூலம் அமிர்தசரஸ் சென்றார். அங்கிருந்து 'வகா' எல்லை வழியாக பாகிஸ்தானின் லாகூர் போய்ச்சேர்ந்தார்.

அவரை பாகிஸ்தான் துணைத்தூதர் முனைவர் சயீத்பாட்டி வரவேற்றார். லாகூரில் உள்ள லட்சுமி மான்ஷன்' என்ற இடம்தான் மணிசங்கர் ஐயர் பிறந்து வளர்ந்த இடமாகும். 1947 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் தனியாகப் பிரிவதற்கு முன்பு வரை மணிசங்கர் ஐயர் அங்குதான் வாழ்ந்தார்.

மணிசங்கர் ஐயருக்கு லட்சுமி மேன்சனில் குடியிருப்போர் வரவேற்று மா.கம்யூ விருந்து அளித்தனர். இதில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.


## சாவு அறிவித்தல்

### அருணாசலம் இராமசேது

பிறப்பு:15.10.1937 இறப்பு:05.06.2005

மன்னார் ஆத்திமோட்டைப் பிறப்பிடமாகவும், மன்னார் வெள்ளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் இராமசேது 5.06.2005 அன்று காலமாகியுள்ளார். இவர் காலஞ்சென்ற அருணாசலம் பார்வதியின் அன்பு மகனும், மாரிமுத்துவின் அன்புக்கணவரும் சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி (லண்டன்), புண்ணியமூர்த்தி(சுவிஸ்), நடராசா(லண்டன்), இராஜேஸ்வரி (இலங்கை) கலையழகி (போராளி), அல்லிராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை, காலஞ்சென்ற நடராசா (தமிழ்வைத்தியர்) காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (வட்டக்கண்டல் பாடசாலை அதிபர்),முருகேசு சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவசிவாயம் (லண்டன்) சகுந்தலாதேவி(சுவிஸ்), மதிவதனி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவாகரன்(லண்டன்), கண்ணன்(லண்டன்), புவனேஸ்வரன்(லண்டன்), சிவகௌரி (லண்டன்),நிவிதா (சுவிஸ்), டிவ்வியா(சுவிஸ்), தர்சன் (சுவிஸ்), வினோதனா(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளாங்குளத்தில் 8.06.2005 இன்று புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளன்குடாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(6238)


# பீகாரில் மதச்சார்பற்ற சக்திகளை ஒன்றிணைக்க லல்லுவுடன் பேச முடிவு

பீகாரில் மதச்சார்பற்ற சக்திகளை ஒன்றிணைப்பது குறித்து லல்லு பிரசாத் யாதவுடன் பேச்சு நடத்துவோம். என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் பிரகாஷ்கராத் கூறினார்.

கொல்கத்தாவில் மூன்று நாட்கள் நடந்த மா.கம்யூ கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை முடிந்தது. கட்சியின் அகில இந்திய பொதுச் செயலர் பிரகாஷ்கராத் இதில் பங்கேற்றார். அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

பீகாரில் மதச்சார்பற்ற ஆட்சி அமைய வேண்டும். பா.ஜ ஐக்கிய ஜனதா தளக் கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டியது அவசியம் அதற்கு மதச்சார்பற்ற வாக்குகள் பிரிவதை தடுக்க வேண்டும் மாநிலத்தில் மதச்சார்பற்ற சக்திகளை ஒன்றிணைப்பது குறித்து ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் லல்லு பிரசாத் யாதவுடன் மா.கம்யூ பேசும் ராஷ்டிரிய ஜனதா தளத்துடன் கூட்டணி அமைக்க இ.கம்யூ.ஸ்ட் கட்சி எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாக கேள்விப்பட்டோம் அனைத்து கம்யூ கட்சிகளுடனும் பேசுவோம். தீண்டத்தகாதவர்கள் என்று யாரையும் நாங்கள் அறிவிக்க வில்லை எனவும் அவர் கூறினார்.

# கோவாவில் காங்கிரஸ் கூட்டணி பதவியேற்பு
# முதல் அமைச்சராக பிரதாப் சிங்ரானே தேர்வு

கோவாவில் காங்கிரஸ் கூட்டணி நேற்று பதவி ஏற்றது. புதிய முதல் அமைச்சராக பிரதாப் சிங்ரானே ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சனாதிபதி ஆட்சி அமுலில் இருந்த கோவா மாநிலத்தில் ஐந்து சட்ட சபை தொகுதிகளுக்கு இடைத தேர்தல் நடைபெற்றது. இதில் மூன்று தொகுதிகளில் காங்கிரசும், ஒரு தொகுதியில் அதன் கூட்டணிக் கட்சியான தேசியவாதக் காங்கிரசும் வெற்றி பெற்றன ஒரு தொகுதியில் மட்டும் பா.ஜனதா வெற்றி பெற்றது.

இதன் மூலம், 39 உறுப்பினர் கொண்ட கோவா சட்ட சபையில் காங்கிரஸ் கூட்டணியின் பலம் 21 ஆக உயர்ந்துள்ளது. இதனால் முடக்கி வைக்கப்பட்டுள்ள கோவா சட்ட சபையில் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆட்சி அமைக்க பெரும்பான்மை பலம் கிடைத்தது.

கோவா மாநில காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் நேற்று முன்தினம் கூடி சட்டமன்றக் கட்சித் தலைவராகக் பிரதாப் சிங்ரானேவை தேர்ந்தெடுத்தனர். அவர் ஒரு மனதாக தேர்ந்து எடுக்கப்பட்டதாக அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளரும் கோவா மாநில பொறுப்பாளருமான மார்கரெட் ஆல்வா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைமையிலான புதிய மந்திரி சபையில் மராட்டிய கோமந்த கட்சி மற்றும் சரத் பவாரின் தேசியவாதக் காங்கிரஸ் ஆகிய கூட்டணி கட்சிகளும் இடம்பெறும் என்றும் அவர் அறிவித்தார்.

"பிரதாபசிங்ரானே ஏற்கனவே கோவா சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவராக பதவி வகித்து வந்தார். கூட்டத்தில் அந்தப் பதவியில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.


## சாவு அறிவித்தல்



பிறப்பு:- 22 - 03 - 1968

இறப்பு:- 07 - 06 - 2005



### ஸ்ரீபதி

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் விசுவமடு பகுதி I ஐ வசிப்பிடமாகவும், உடையார் கட்டு தபாலக ஊழியருமாகிய ஸ்ரீபதி என்பவர் 07.06.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னார் சிவம், தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், முருகுப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் மாவீரா! கப்டன் புகழரசன் அவர்களின் அன்பு மைத்துனரும், ஜீவனாவின் அன்புக் கணவரும் சிவானுஜா, மிதுனுஜா, கம்சுஜா, சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார். இறுதிக் கிரிகைகள் 08.06.2005 மு.ப 11 மணிக்கு அன்னாரது விசுவமடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விசுவமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-
மனைவி ஸ்ரீ.ஜீவனா

(6237)


# படையினருக்கான ஆயுதக் கொள்வனவில் ஊழல்;
# தே.ஜ.கூட்டணிக்கு எதிராக சி.பி.ஐ வழக்கு?

(புதுடில்லி)

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் நடந்த ஆயுத பேரம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்ய சி.பி.ஐ தயாராகி வருகிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் கார்க்கில் போருக்கு ஆயுதங்கள் சவப் பெட்டிகள் உட்பட பல்வேறு பொருட்களை படைத்துறை கொள்முதல் செய்தது. இதில் ஊழல் நடந்ததாக காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியது அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது புகார் தெரிவிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவின் டெனல் என்ற ஆயுத தயாரிப்பு நிறுவனம் பிரிட்டனைச் சேர்ந்த ஒருவருக்கு பெரும் தொகையை கை மாற்றியது. இதன் மூலம் இந்தியாவுக்கு ஆயுத விநியோகம் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது இது பற்றி விசாரணை நடத்துமாறு சி.பி.ஐக்கு உத்தரவிடப்பட்டது.

முறைப்படியான அரச அறிவிப்பு குறிப்பாக குற்றச்சாட்டுடன் புகார் அளித்தால் விசாரணை நடத்தலாம் என சி.பி.ஐ பதில் அனுப்பியது. அதன்படி அரசு அறிவிப்புடன் 37 ஆயுத கொள்முதல் நடவடிக் கைகள் தொடர்பான ஆவணங்களை படைத்துறை சி.பி.ஐக்கு வழங்கியிருக்கிறது. விரைவில் வழக்குப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்க சி.பி.ஐ தயாராகி வருகிறது.

# ஜெயேந்திரர் விவகாரத்தில் கருணாநிதி மீது அவதூறு வழக்கு தமிழக அரசால் தாக்கல்

ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் அரசை அவதூறாகப் பேசியதாகக் குற்றம் சாட்டி தி.மு.க தலைவர் கருணாநிதி மீது புதிய அவதூறு வழக்கை தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.

காஞ்சிபுரம் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரரை பொலிசார் கைது செய்தனர். அவர் கைது செய்யப்பட்ட பின்பு தி.மு.க தலைவர் கருணாநிதி சில கருத்துக்களை கூறினார். கருணா நிதியின் கருத்துக்களால் தமிழக அரசுக்கு அவதூறு ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக அவர் மீது தமிழக அரசு வழக்குத் தொடர்ந்து உள்ளது. இந்த வழக்குத் தொடர்பா ஆவணங்கள் அனைத்தும் சென்னை முதன்மை நீதிமன்றில் கடந்த தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# கடந்த 20 ஆண்டுகளில் 'ஆஷஸ்' தொடரில் தோற்கும் முதல் தலைவனாக இருக்கமாட்டேன்




"கடந்த 20 ஆண்டுகளில் ஆஷஸ் தொடரில் தோற்கும் முதல் தலைவனாகஇருக்க மாட்டேன். மாறாக கோப்பையை தக்க வைத்துக் கொண்ட இன்னொரு அவுஸ்திரேலிய தலைவனாகத் தான் இருப்பேன்' என்று சவால் விடுகிறார் ரிக்கிபொண்டிங்.

இங்கிலாந்து வந்துள்ள அவுஸ்திரேலிய அணி மூன்றாவது அணியாக பங்களாதேஷ் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. அதற்குப் பின் இங்கிலாந்துடன் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் மோதுகிறது. இத் தொடர் ஜூலை 21 இல் தொடங்குகிறது இதில் கோப்பையை வென்று தனது கௌரவத்தை நிலை நாட்ட இரு அணிகளுமே முயற்சிக்கும்.

கடந்த 20 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய அணிதான் ஆஷஸ் கோப்பையைக் கைப்பற்றி வருகிறது. 1986- 87 மைக்கேட்டிஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி மகத்தான வெற்றி பெற்றது. அப்போது ஆலன் போர்டர் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு மார்க்டெய்லர், ஸ்டீவ்வோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணி தோல்வியே சந்திக்கவில்லை.வரிசையாக எட்டுத் தொடர்களை வென்று சாதித்தது.

ஆனாலும் இம்முறை முற்றிலும் மாறுபட்ட இங்கிலாந்து அணியை எதிர் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அவுஸ்திரேலியாவுள்ளது. தலைவர் மைக்கேல் வோன் தலைமையிலான இங்கிலாந்து அணி பலம் வாய்ந்ததாகக் காட்சி அளிக்கிறது. கடந்த ஐந்து தொடர்களில் தொடர்ந்து வெற்றி பெற்று டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. ஆஷஸ் தொடரை5-0 என்ற கணக்கில் வென்றால் அவுஸ்திரேலியாவை முந்தி முதல் இடத்தைப் பிடிக்கலாம். இந்தச் சூழலில் பொண்டிங் தோற்ற தலைவனாகத் தான் நாடு திரும்ப வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆஷஸ் தொடரில் தோற்போம் என நினைத்து தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டதில்லை. கோப்பையை வென்ற இன்னொரு அவுஸ்திரேலிய தலைவனாகத் தான் பிரகாசிப்பேன் கடந்த பத்து ஆண்டுகளாக எந்தத் தொடரில் விளையாடினாலும் நாங்களே வெற்றி பெற்றுள்ளோம்.அந்த வெற்றி பாரம்பரியம் இப்போதும் தொடரும். சமீப காலமாக இங்கிலாந்து அணி சிறப்பாக செயற்பட்டு வருகிறது. ஸ்ரோஸ், பிளின்டொப் போன்றவர்கள் மகத்தான எழுச்சி கண்டுள்ளனர்.இதனால் ஆஷஸ் தொடரில் விறுவிறுப்பு அதிரிக்குமே தவிர அவுஸ்திரேலியா தோற்க வாய்ப்பில்லை இவ்வாறு பொண்டிங் கூறினார்.

# அவுஸ்திரேலிய அணியைவிட இங்கிலாந்து அணி கடுமையானது




அவுஸ்திரேலியாவைவிட இங்கிலாந்து கடுமையான அணி என பங்களாதேஷ் கிரிக்கெட் அணித்தலைவர் ஹபிபுல்பசார் தெரிவித்துள்ளார்.

அவ்வணியுடனான இருபோட்டிகளிலும் பங்களாதேஷ் தோல்வியை சந்தித்த பின்னர் வெளியிட்டகருத்தில் அவர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, அவுஸ்திரேலியாவுடன் தாம் போட்டியிட்ட போது ஓரளவு சமாளிக்க முடிந்ததாகவும் ஆனால் இங்கிலாந்துடனான போட்டிகளில் பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்ததாகவும் கூறியுள்ளார்.

இங்கிலாந்து, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் நட்வெஸ்ட் கிண்ணத்துக்காக முத்தரப்பு போட்டியில் மோதவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பந்தை எறிவதாக மீண்டும் ஹர்பஜன்சிங் மீது புகார்



இந்திய கிரிக்கெட் அணியின் பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் பந்தை எறிவதாக ஏற்கனவே புகார் எழுந்தது. இதையடுத்து அவரது பந்து வீச்சை அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஆய்வுசெய்து பந்து வீச்சில் தவறில்லை என்று அறிவித்தது. ஆனால் இப்போது மீண்டும் அவர் சர்ச்சையில் சிக்கியுள்ளார். தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் கவுண்டிகழகப் போட்டியில் ஹர்பஜன்சிங் பங்கேற்று விளையாடி வருகிறார்.

சரே அணியில் விளையாடும் அவர் எதிர் அணி வீரர் மைக்கேல் பவுலுக்கு பந்து வீசினார். அது எல்லைக் கோட்டை தாண்டிச் சென்றது.

ஆனால் நடுவர் பீட்டர் வில்லே அதை 'நோபோல் ' என்று அறிவித்ததுடன் சிக்சர் எனவும் அறிவித்தார். ஹர்பஜன்சிங் பந்தை எறிந்ததாக நினைத்து இந்த முடிவை நடுவர் எடுத்தார். இதனால் ஹர்பஜனுக்கு மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.ஆனால் இது குறித்து எந்த விசாரணையும் நடக்காது என்று போட்டி அமைப்பாளர் தெரிவித்தார்.

# டேனிஸ் கனேரியா அபார பந்து வீச்சு தொடரை சமன்செய்தது பாகிஸ்தான்



ஜமேக்காவில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 136 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நான்காம் நாளான நேற்று முன்தினம் தனது இரண்டாவது இனிங்சில் 250 என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 114 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையை அடைந்தது.தொடந்து ஐந்தாம் நாளில் அனைத்து விக்கெட்டுக்களையும் 143 ஓட்டங்களில் இழந்து அவ்வணியின் டெவன் ஸ்மித் மட்டுமே அதிகபட்சமாக 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். முதல் இனிங்சில் 153 ஓட்டங்களைப் பெற்ற பிரைன்லாறா அணித்தலைவர் சந்தர் போல் இருவரும் ஓட்டம் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். சர்வான், கெய்ல், ஹின்டஸ் ஆகியோர் முறையே 8, 19,15 என்ற ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.



பந்துவீச்சில் பாகிஸ்தானின்டேனிஸ் கனேரியா சிறப்பாக பந்துவீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும் சபிர்அகமட் நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

முன்னதாக முன்னைய நாள் எண்ணிக்கையான நான்கு விக்கெட்டுக்களுக்கு 223 என்ற நிலையில் இரண்டாவது இனிங்சை தொடர்ந்த பாகிஸ்தான், அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் ஆட்டமிழக்காது பெற்ற 117 ஓட்ட எண்ணிக்கைத் துணையுடன் 309 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

# றொனால்டினோ அற்புத ஆட்டம் பராகுவேயை தோற்கடித்தது பிரேசில்



உலகக் கோப்பை தகுதி சுற்றுப்போட்டியில் றொனால்டினோ அற்புத ஆட்டத்தை வெளிப்படுத்த, பிரேசில் அணி பராகுவேயைச் 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

2006 ஜேர்மனியில் உலக கோப்பை கால்பந்து போட்டி நடக்கிறது. தென்அமெரிக்கா பகுதிக்கான பலப்பரீட்சையில் ஆர்ஜென்டீனா, பிரேசில் உட்பட 10 அணிகள் உள்ளன. முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலகக் கோப்பை போட்டிக்குத் தகுதி பெறும்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பிரேசில் அணி பராகுவேயை சந்தித்தது. சொந்தப் பிரச்சினை காரணமாக றொனால் டோ பங்கேற்கவில்லை. இவருக்குப் பதிலாக இளம் வீரர் ராபினோ பிரேசில் அணியில் வாய்ப்புப் பெற்றார். உள்ளூர் ரசிகர்கள் கரகோஷம் எழுப்ப 32 நிமிடத்தில் பெனால்டிக் வாய்ப்பில் றொனால்டினோ முதல் கோல் அடித்தார். 40 ஆவது நிமிடத்தில் பெனால்டிக் ஏரியாவில்வைத்து ரபினோ கீழே தள்ளிவிடப்பட இன்னொரு பெனால்டிக் தரப்பட்டது.இம்முறையும் றொனால்டினோ துல்லியமாகக் கோல் அடித்து அசத்தினார். பின்னர் ஜிராபர்ட்டோ (70 ஆவது நிமிடம்) ரபினோ (83ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடிக்க பிரேசில் அணி வெற்றிபெற்றது. பராகுவே அணிக்கு றொக் சாண்டா கிராஸ் தலையால் முட்டி ஒரு கோல் (82 ஆவது நிமிடம்) அடித்து ஆறுதல் தந்தார். இன்று பிரேசில் ஆர்ஜென்டீனா அணிகள் மோதுகின்றன.



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்று முன்தினம் தெற்குப்பிரான்சிலுள்ள வில்லியர்ஸ் பிரிட்டொனியக்ஸ் என்ற வரலாற்றுப்புகழ் மிக்க இடத்திற்குச் சென்றிருந்தனர். 1918இல் இங்கு நடந்தபோரில் அவுஸ்திரேலிய போர்வீரர்கள் ஏராளமானோர் உயிர் துறந்தனர். இறந்தவர்களுக்கு ஆஸி.அணி வீரர்கள் வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினர்.




# விளையாட்டு வீரர்கள் அறிமுக அட்டைபெறவும்


தமிழீழ விளையாட்டுத் துறையால் விளையாட்டு வீரர்களுக்கான அறிமுக அட்டை வழங்கப்பட்டு வருகின்றன. எனவே முல்லை மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து விளையாட்டு கழகங்களும் 30.06.2005இற்கு முன் தங்கள் அறிமுக அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

01.07.2005 தொடக்கம் அறிமுக அட்டை பெற்றுக்கொள்ளாத வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதில் சிரமங்கள் ஏற்படலாம் என்பதை முல்லை மாவட்ட விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர். மேலதிக விபரங்களுக்கு முல்லை மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் அல்லது முல்லை மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.




சுதந்திரபுரம் இருட்டுமடுவில் இயங்கிவரும் மகேஸ்வரன் முன்பள்ளியில் நடை பெற்ற விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றும் சிறார்களையும் வெற்றிபெற்ற சிறார்களுக்கு அப்பகுதி கிராமசேவகர் பரிசில் வழங்கிகௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படம்:- இ.சசி)

## சிந்தனைக்கு



ஒரு போரின் வெற்றியைத்தீர்மானிப்பது ஆட்பலமோ-ஆயுதபலமோ அல்ல; அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 08-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# பேரினவாதத்தின் கூட்டு

சிறிலங்கா இராணுவப்புலனாய்வுப்பிரிவின் பெயரில் மற்றுமொரு புரளி "சண்டேரைம்ஸ்" பத்திரிகையால் கிளப்பப்பட்டுள்ளது. திருமலை மாவட்டம் சம்பூரில் விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதை ஒன்றை அமைப்பதாக அப்பத்திரிகையால் வெளியிடப்பட்ட தகவலே அதுவாகும்.

இப் பத்திரிகைத் தகவலின் படி சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பு துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும், அங்கு பெரும் எண்ணிக்கையிலான சீமெந்துப் பைக்கற்றுகளும், பெருமளவு கம்பிகளும், கற்களும் குவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை சிறிலங்கா விமானப்படையின் ஆளில்லா வேவு விமானங்கள் ஊர்ஜிதம் செய்திருப்பதாகவும் அப்பகுதி மக்களும் இத்தகவலை ஊர்ஜிதம் செய்துள்ளது போன்றும் அத்தகவல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளைக் குழப்புவதும் இனவாதத்தைத் தூண்டி விடுவதும் சிங்கள அரசியல் வாதிகளா? பௌத்த பேரினவாத அமைப்புக்களா? அன்றி சிங்கள மற்றும் ஆங்கில பேரினவாத ஊடகங்களா? இவற்றில் அதிக பங்கு வகிப்பவை எவை? என்பதை பகுத்தறிதல் கடினமாகும். ஏனெனில் இவ் விடயத்தில் அவை தனித்தும் இயக்குகின்றன. கூட்டாகவும் இயங்குகின்றன. ஒன்றுக்கொன்று அனுசரணையாகவும் இயங்குகின்றன.

சம்பூரில் விடுதலைப்புலிகள் விமான ஓடு தளம் ஒன்றை அமைப்பதாக தகவல் வெளியிட்டுள்ள சண்டே ரைம்ஸ் பத்திரிகையானது இத் தகவலை ஏன் தற்பொழுது வெளியிட்டது? தற்பொழுது தான் தகவல் கிடைக்கப்பெற்ற நிலையில் இத்தகவலை வெளியிடும் முன்னர் இதன் சாத்தியப்பாடு? நம்பகத் தன்மை போன்றவற்றை அது ஆராய்ந்ததா? அவ்வாறு ஆராய்ந்திருக்குமானால் அது இத் தகவலை வெளியிட்டிருக்குமா? என்பது சந்தேகமே.

ஏனெனில் விமான ஓடு பாதை ஒன்றை அமைப்பதற்கு 25 ஏக்கர் நிலப்பரப்பு போதுமானதா? அவ்வாறு தான் அமைப்பதாயினும், சீமெந்துப் பைக்கற்றுக்களையும், கம்பிகளையும் கண்டறியத்தக்க வகையில் வெட்ட வெளியில் அவற்றை இறக்கித்தான் வைப்பார்களா?

சரி பெருமளவிலான சீமெந்துப் பைக்கற்றுக்களும், இரும்புக் கம்பிகளும் எந்த வழியால் கொண்டு செல்லப்பட்டன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சீமெந்து கொண்டு செல்வதற்கு ஏற்கனவே இராணுவத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளதே. அவ்வாறானால் இவை எங்கிருந்து கொண்டு வரப்பட்டன?

புலனாய்வுத் தகவல் என்ற ரீதியில் சண்டே ரைம்ஸ் இவ் விவகாரத்தை வெளிக் கொண்டு வந்தமையானது உண்மையில் விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதை ஒன்றை அமைத்துள்ளமையினால் அல்ல. ஏனெனில் விடுதலைப்புலிகளினால் அத்தகைய முயற்சி ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை.

உண்மையில் ஏற்கனவே இப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் அமுல் படுத்தத் தொடங்கியுள்ள பொருளாதாரத் தடைக்கு நியாயம் கற்பிப்பதற்காகவே ஆகும். அதாவது திருமலை தெற்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சீமெந்து, கம்பி மற்றும் கட்டடப் பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு போடப்பட்டுள்ள தடையை நியாயப்படுத்துவதற்கேயாகும். வேறுவிதமாகக் கூறின் சிறிலங்காப் புலனாய்வுத் துறை மற்றும் இராணுவத்தினரின் செயற்பாட்டிற்கு காரணம் கற்பிப்பதற்கு ஊடகம் வழங்கும் அனுசரணையே இதுவாகும். அத்தோடு சீமெந்து, இரும்பு போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை நிராகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியே இதுவாகும்.

சிங்கள பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை என்றுமே தமது விருப்பிற்கு ஏற்ப வாழ அனுமதித்ததில்லை. அவர்களின் உரிமைகளை பகிர்ந்தளிக்கவும் தயாராக இருந்ததுமில்லை. அதிலும் குறிப்பாக திருமலை மாவட்டத்தைக் கபளீகரம் செய்வதில் அனைவருமே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். ஏனெனில் திருமலை மாவட்டம் சிதைக்கப்படுமானால் தமிழர்களின் தேசியப் போராட்டம் சிதைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் சம்பூரில் விடுதலைப்புலிகளின் விமான ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டானது பௌத்த- சிங்களப் பேரினவாத சக்திகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறான தமது செயற்பாட்டிற்கு நியாயம் கற்பிக்க மேற்கொண்டுள்ள முயற்சியே ஆகும். வேறு விதமாகக் கூறுவதானால் நாட்டில் நிலவும் ஓரளவு அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் முயற்சியே ஆகும்.

# சனாதிபதித் தேர்தலுக்கு ராஜபக்ஷ முன் ஏற்பாடு;
# அலரிமாளிகையில் புதிய செயலகம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் ஒருவரை இன்னமும் தெரிவு செய்யாத போதிலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான முன்னேற்பாடு வடிக் கைகளில் ஈடுபட்டுள்ளார். சனாதிபதி தேர்தல் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவர் அலரிமாளிகையில் செயலகம் ஒன்றினையும் ஆரம்பித்துள்ளார்.

சனாதிபதி தேர்தல் நடைபெற்றால் அதில் சுதந்திரக் கட்சியின் சார்பில் தான் போட்டியிடுவது தொடர்பாகவும், தனக்கு ஆதரவினைத் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவும், பிரதமர் இந்தச் செயலகத்தை ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதனை விட மலையகப்பகுதிகள் உட்பட பல இடங்களில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் படங்களுடனான சுவரொட்டிகளும் ஒட்டப் பட்டுள்ளன. சனாதிபதி வேட்பாளரை சுதந்திரக்கட்சி இன்னமும் தெரிவு செய்யாத போதிலும் கட்சி உறுப்பினர்களின் ஆதரவினை தனது பக்கம் திருப்பும் நடவடிக் கைகளில் பிரதமர் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை சனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெற்றால் ஜே.வி.பியும் தனித்து வேட்பாளர் ஒருவரை நிறுத்துமென தெரியவருகின்றது. ஜாதிக ஹெல உறுமயவும் தனியாக வேட்பாளரை நிறுத்தவுள்ள தாக அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட
# தாயகச் சிறுவர்களுக்கு உதவ கனடாவில் கலை நிகழ்ச்சி

(ஸ்காபரோ)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தாயகச் சிறார்களுக்கு உதவுமுகமாக கடந்த சனிக்கிழமை கனேடிய தமிழர் உதவும் கரங்கள் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நடைபவனியும், கலை நிகழ்ச்சிகளும் ஸ்காபரோ நகரிலுள்ள சிவிக் சென்ரரில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி ஜெயபாலன் தாயகத்தில் தமிழர் புனர்வாழவுக் கழகம் முன்னின்று செய்துவரும் பணிகள் பற்றியும் அவ் அமைப்பின் எதிர்கால வேலைத் திட்டங்கள் பற்றியும் விளக்கவுரையினை வழங்கினார்.

அத்துடன் கனேடிய இளைஞர் அமைப்பின் பிரதிநிதி திவா பேசும் போது, ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேரடியாகச் சந்தித்த போது ஏற்பட்ட அனுபவங்களை உருக்கமாகக் கூறினார்.

இந் நிகழ்ச்சியின் இடையிடையே பல பிரமுகர்கள் தாமாக முன்வந்து நிதியுதவி வழங்கியுள்ளனர்.

# கொச்சிக்கடை பகுதியில் சுடப்பட்டவர்களுக்கு எந்த அமைப்புடனும் தொடர்பில்லை!

### — உறவினர்கள் தெரிவிப்பு

(கொழும்பு )

கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். குருநகரைச் சேர்ந்த தேவதாஸ் இமானுவேல் மற்றும் பிரான்சிஸ் டெனிசியஸ் ஆகியோருக்கு எந்த அமைப்புடனும் தொடர்புகளில்லை எனவும் கனடாவிலிருந்து வருகை தரவிருந்த தமது உறவினர்களை அழைத்துச் செல்வதற்காகவே இவர்கள் கொழும்பிற்கு வந்ததாகவும் அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் குருநகரில் கடற் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் எனவும் அவர்களின் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை கொழும்பிற்கு புறப்பட்ட இவர்கள் மறுநாள் காலை கொச்சிக்கடைப் பகுதியில் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த வேளை சுட்டுக் கொல்லபட்டனர் என்பது தெரிந்ததே.

# சுகாதார சேவையாளர்கள் திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவையாளர்கள் நேற்று திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர்.இணைந்த சேவை அலுவலர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்திக்கக்கோரியே இந்த ஆர்ப்பாட்டம் ஆளுநர் அலுவலகத்தின் முன்னால் நடத்தப்பட்டுள்ளது.(32)

# ஓமந்தை புத்தர்சிலை விவகாரம்; தொல்பொருளியலாளர்கள் ஆராய்வு

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் புதிதாக வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை தொடர்பாக ஆராய்வதற்கு தொல்பொருளியலாளர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர்

புத்தர்சிலை வைக்கப்பட்டமை தொடர்பாகவும் வைக்கப்பட்டு இருக்கும் இடம் சம்பந்தமாகவும் ஆராய்ந்தார்கள். பழமையானது போன்று தோற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கற்கள் தொடர்பாகவும் பார்வையிட்டார்கள்.

வவுனியா பொலிசாரின் பாதுகாப்புடன் சென்ற மூன்று அதிகாரிகள் அந்தப் பகுதி மக்களிடமும் கருத்துக்களை கேட்டு அறிந்து கொண்டனர்.

சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ள 'நட்டமு' என்ற சொல்லானது பாரம்பரியம் அல்லது தொன்மையானது என்று தெரிவிக்கப்படுகிறது. அது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது

புத்தர் கோவில் அமைக்கப்பட்டு இருக் கின்றமை புதிதானதாக இருக்கின்ற போதும் அங்கு வைக்கப்பட்டுள்ள கற்கள் ஆச்சரியத்தினை ஏற்படுத்து வதாகவும் அந்தக் கற்கள் அநுராத புரம் பொலனறுவை காலத்திற்கு உரியது போன்று இருப்பதாகவும் ஆனால் இந்த கல் அந்தப் பகுதிக்கு வந்தது அல்லது எப்போது அந்தக் கற்கள் நடப்பட்டது என தெரியவில்லை என்று தொல்பொருள் ஆய்வாளர் குழுவில் வந்த பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

எனினும் அந்தக் கல் புதிதாக நடப்பட்டவையாக இருக்குமானால் அந்தக் கற்கள் கிண்டி எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதன் பின்னர் தான் முடிவு செய்ய முடியுமென்று தெரிவித்துள்ளார்

வரலாற்றுப் புகழ் மிக்க ஓமந்தைப் பிள்ளையார் கோவிலில் இருந்த பழமையான கற்களே புத்தர்சிலைக்குப் போகும் பாதையில் நாட்டப்பட்டு இருப்பதாக ஊர்வாசிகள் தெரிவிக்கின்றார்கள்
இது இவ்வாறு இருக்க அந்தக் கோவிலில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையினை இனம் தெரியாதவர்கள் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் எடுத்து பற்றை ஒன்றினுள் வைத்துள்ளனர். இதன் பின்னர் மீண்டும் அந்தப் புத்தர் சிலை எடுக்கப்பட்டு ஏற்கனவே இருந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது

ஓமந்தைப் புத்தர் சிலை தொடர்பாக செய்திகள் வெளியான தன் பின்னர் வவுனியா வாழ் மக்கள் மத்தியில் பரபரப்பினை ஏற்படுத்திய இந்த செய்தியையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற வன்னி பாராளுமன்ற உருப்பினர்களுக்கு இராணுவத்தினாராலும் பொலிசாராலும் உறுதியளிக்கப்பட்டது போன்று இன்னும் புத்தர்சிலை அகற்றப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (21)

# சமுர்த்தி முகாமையாளர்கள் இன்று போராட்டம்

சமுர்த்தி முகாமையாளர்கள் இன்று சமுர்த்தி அமைச்சின் முன்னால் போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர். தமக்கு நியமனம் வழங்கப்பட்டது முதல் இது வரை பதவியுயர்வுகள் வழங்கப்படாமை மற்றும் உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாமை என்பவற்றை கண்டித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த சமுர்த்தி முகாமையாளர்கள் சங்க இணையத்தலைவர் காமினி; சமுர்த்தி முகாமையாளர்களுக்கு உரிய வேதன உயர்வை வழங்கக்கோரியும், உரிய கொடுப்பனவுகளை வழங்கக்கோரியும் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் தமது எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் எனக் குறிப்பிட்டுள்ளாார். (32)

~பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி கைச்சாத்திட்டால்~

# நாடுதழுவிய போராட்டம் நடத்த ஜே.வி.பி யினர் தீர்மானம்

(கொழும்பு)

சனாதிபதி பொதுக்கட்டமைப்பில் கையொப்பம் இடுவதில்லை எனக் கூறுவதோடு மட்டுமல்லாமல் பொதுக்கட்டமைப்புக் குறித்த அனைத்து விடயங்களையும் வாபஸ் பெறுவதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என ஜே.வி.பி கோரவுள்ளதாகவும் அவ்வாறு சனாதிபதி பகிரங்க அறிவிப்பை வெளியிடாவிடின் அரசில் இருந்து வெளியேறுவதுடன் நாடு தழுவிய போராட்டங்களை நடத்த தீர்மானித்திருப்பதாகவும் ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை சனாதிபதி பொதுக்கட்டமைப்புக்கான அனைத்து விடயங்களையும் நிறைவு செய்துள்ளதாகவும் வெளிப்படையாக அன்றி உள்ளார்ந்த அடிப்படையில் அது குறித்த நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் ஜே.வி.பி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்பாக இறுதியானதும் தீர்க்கமானதுமான முடிவொன்றை எடுக்கவுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து எதிர்வரும் பத்தாம் திகதி நடத்தப்படவுள்ள ஊடக மகாநாட்டில் தெளிவான அறிவிப்பை வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற பகிஷ்கரிப்பு

நேற்று முதல் தமது குழு பாராளுமன்ற அமர்வை புறக்கணிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்திக் கொள்ளப்படுவதை ஆட்சேபித்துத்தாம் இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்ட போதும் பொதுக்கட்டமைப்பை அமைப்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாக அவர் கண்டித்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.(32)

### ஊடகத்துறை....

வழங்கும் வகையிலேயே இந்தப் பதவி விலகல் இடம்பெற்றுள்ளது. நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வைக்கான சனாதிபதி தீர்க்கமான சில நடவடிக்கைகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனடிப்படையில் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் கீழ் பிரதியமைச்சர் திலான் பெரேரா மற்றும் மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே ஆகியோருக்கு அமைச்சரவையில் இடம்தரப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


## சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணி வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூகவலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணிகள் வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகின்றனர்.

க.பொ.த உயர்தரம்வரை கல்வி கற்று தொழில் வாய்ப்புக்களின்றி உள்ளவர்களும், க.பொ.த சாதாரணதரத்தில் தேர்ச்சிபெற்று சமூகமட்டத்தில் சேவையாற்றியதற்கான அனுபவம் வாய்ந்தவர்களும் தகுந்த ஆவணங்களுடன் எதிர்வரும் 13.06.2005 அன்று முற்பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி.12041)



## கற்கை நெறிகள் ஆரம்பம்

*பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் ஊடாக நோர்வே நிதி உதவியுடன் முல்லை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் கணினி இலத்திரனியல் கற்கை நெறிகள் 10.06.2005 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதால் இக்கற்கை நெறிகளுக்கு தோற்ற இருக்கும் மாணவிகள் (கிளி. மாவட்டத்துக்கு போக்குவரத்து வசதியும், பிறமாவட்டங்களுக்கு தங்குமிடவசதியும் இலவசமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது). கீழ் காணும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.*

தொடர்புகளுக்கு:- பெண்கள்அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், முதன்மைச் செயலகம், யாழ.சாலை, கிளிநொச்சி.

(6239)


## ஒரு வழிப்பாதையாக முனீஸ்வரன் வீதி

யாழ்.நகரில் உள்ள முனீஸ்வரன் வீதி எதிர்வரும் ஜூலை மாதம் முதல் ஒருவழிப்பயணப் பாதையாக பயன்படுத்தப்படும் என யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. அந்த வகையில் முனீஸ்வரன் வீதி கண்டி வீதியில்இருந்து யாழ்.நகரினுள் பிரவேசிப்பதற்கான ஒரு வழிப்பாதையாக அமையும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரில் தற்போது நிலவுகின்ற வீதிப்போக்குவரத்து நெருக்கடிகளுக்கும்,அதனால் அன்றாடம் அதிகரித்து வருகின்ற விபத்துக்களுக்கும் தீர்வு காண்பதற்காகவே மேற்படி முனீஸ்வரன்வீதியும் ஒரு வழிப்பயணப் பாதையாக வரும் ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வருகிறது என ஆணையாளர் கலாநிதி க.குணராஜா மேலும் தெரிவித்துள்ளார் .(33)

### சந்திரிகா...

தெரிவிக்கப்பட்டுள்ளது.அன்றைய தினத்தின் ஏனைய அமர்வுகள் தொடர்பில் அட்டவணைகள் எவையும் வெளியாகவில்லை. அது தொடர்பில் தமக்கு எவ்வித தகவலும் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

### இளைஞர்கள்...

இதனிடையே கொழும்பில் சுட்டுக் கொல்லப் பட்ட இரு இளைஞர்களினதும் சடலங்கள் இன்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு அடக்கம் செய்யப்படவுள்ளதாக உறவினர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (27)

### தமிழ்த்...

தாகக் குறிப்பிட்டார். இதனையடுத்தே இரு தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

எனினும் ராஜித சேனாரட்ன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இதன்போது குறுக்கிட்டு நிலைமையை இயல்புபடுத்தினர்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் மகிந்த சமரசிங்கவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தமிழ்தேசியக் கூட்டமைப்பினரின் ஆர்ப்பாட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கியிருக்க வேண்டுமென அவர் இதன்போது வலியுறுத்தினார். (32)

### கருணாவின்...

- வீரவேங்கை - செஞ்சுடர் (வேலாயுதம் -சசிக்குமார் விஷ்னு ஆலயவீதி, கிரான், மட்டக்களப்பு)
- வீரவேங்கை - அனவேந்தி (நடேசலிங்கம்- ஜெயசீலன் மகிழவட்டவான், ஆயித்தியமலை, மட்டக்களப்பு)
- வீரவேங்கை - பரமஜீவன் (முருகுப்பிள்ளை- குலேந்திரன் கடற்கரைவீதி புதுக்குடியிருப்பு, இலக்கம் 4 ஆரயம்பதி, மட்டக்கப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்துள்ளனர். இம்மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் தனது இலங்கை விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

எனினும் புதிய திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்குஇவர் வருகைதரவிருந்தார் தற்போதைய நாட்டின் அரசியல் சூழ்நிலையினை கருத்திற்கொண்டே அவர்விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ள தாகஇந்திய உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## தன்னைத்தானே சுட்டு பொலிசார் தற்கொலை

(வவுனியா)

வவுனியா மடுக்கந்த பகுதியில் சிறிலங்கா பொலிசார் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். நேற்றுப்பிற்பகல் 2.45 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தின்போது குறித்த நபர் தன்னுடன் கடமையில் இருந்த சகாவின் துப்பாக்கியைப் பறித்தே தன்னைத்தானே சுட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் பதுளை பசறையைச் சேர்ந்த வி.என் திஸநாயக்க (வயது-36) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (21)

## ஆபாசத் திரைப்படப் பிரதிகள் சாவகச்சேரியில் எரித்து அழிப்பு!

சாவகச்சேரி நகரத்தில் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடமிருந்து பெருந்தொகையான ஆபாசத் திரைப்பட இறுவட்டுக்கள்,ஒளிநாடாக்கள் கலாச்சாரத்தை பேணும் அமைப்பால் கைப்பற்றப்பட்டு நேற்றுமதியம் ஒரு மணியளவில் சாவகச்சேரி நகர பேருந்து நிலையத்திற்கு முன்னால் தீமூட்டி எரித்து அழிக்கப்பட்டது.



இதுகுறித்து கருத்துத் தெரிவித்த தென்மராட்சிகோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஈஸ்வரன்;

மாணவர் சமூகத்தை தவறான பாதையில் வழி நடத்துவோருக்கு எதிராகவும் இப்படியான தவறான திரைப்படங்களை மாணவர்கள் கைகளில் திணிப்போருக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இப்படியான குற்றங்களைத் தடுப்பதற்கு மக்களின் பங்களிப்பு அவசியமெனவும் அவர் தெரிவித்தார். (28)

### படுகொலை...

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் பயணம் செய்ய பொருத்தமான நடவடிக்கையை எடுக்கும்.

தற்போது இடம் பெற்றுவரும்படுகொலைகளைத்தடுப்பதற்கு எமது அலுவலகங்களையும் கட்டமைப்புக்களையும் அதிகரித்துள்ளோம். நாம் எமது விசாரணைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.துரதிஷ்டவசமாக யார் இந்தக் கொலைகளைச் செய்கிறார்கள் எனஅறியமுடியாதுள்ளது. நாம் பாதுகாப்பு நிலைமைகளில் தீவிர கவனம் எடுத்துள்ளோம்.இது தொடர்பாக அறிவதற்கு அரசாங்கத்துடனும் விடுதலைப்புலிகளுடனும் கலந்துரையாடுகின்றோம்.

உண்மையிலே அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் கொலைகள் அதிகரித்துள்ளன.இவற்றிற்கு நாம் பொறுப்பல்ல. நாம் போர் நிறுத்த மீறல்களை அவதானித்து முறைப்பாடுகளை எடுத்து விசாரணைகளை நடத்துகின்றோம்.

ஆனால் அரசாங்கமே இக் கொலைகள் பற்றிக் கூறவேண்டும் எனத்தெரிவித்தார். (லோ)


## பணிநிலை வேண்டுகை

பணி நிலை - எழுதுநர்

அகவை - 20 தொடக்கம் 30 வரை

பால் - ஆண் பாலர் மட்டும்

தகைமை - க.பொ.த உயர்தரம் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். பேசத் தெரிந்திருத்தல் வரவேற்கத்தக்கது.

மேற்படி பணி நிலைக்கு ஆர்வமும் ,திறமையும் , தகுதியும் ,உடையோர் 11.06.2005 அன்று காலை 10 மணி தொடக்கம் 2 மணிக்கு முன்னதாக தகுந்த ஆவணங்க ளுடன் நேரில் சமுகம் தரவும்.

குறிப்பு- ஊதியம்நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகவல்:- நந்தவனம், தபாற்கந்தோர் முன்பாக, யாழ்சாலை, கிளிநொச்சி.

(6241)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது